ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,886 — 1969 දෙසැම්බර් 26 වැනි සිකුරාදා — 1969.12.26

14,886 ம் இலக்கம் — 1969 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 1319 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. | 1348 |
| பரீட்சைகளும் பரீட்சை பெறுபேறுகளும் பிறவும் .. | 1329 | உத்தியோக தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 1343 | அறநிப குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 1347 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 1347 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

---

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல். அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க.பொ.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இந்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் ; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நீயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு) விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்துக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**— தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

A 89/X2174/69

## கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் போக்குவரத்து விரிவுரையாளர்—II ஆந் தர பதவிகள்

கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் போக்குவரத்து விரிவுரையாளர் II ஆந் தர பதவிகளுக்கு (ஆண்/பெண்) இருபாலரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் இடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(i) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—1970.1.16.
(ii) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1970.1.23.

**குறிப்புகள் : (i)** அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாதது மான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

**(ii)** விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

**(iii)** வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்.

**(iv)** **மருத்துவ சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. சம்பளமும் சகாயப் படிகளும் சேவை நிபந்தனைகளும்.—இப் பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

(i) ரூ. 6,720—12 × 360—ரூ. 11,040 வருடாந்தம்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரி எதிலேனும் கடமை புரியவேண்டும். தற்போது காலியிடங்கள் காலி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியில் உண்டு ; தெரிவு செய்யப்படுபவர்கள் இக்கல்லூரிக்கு நியமிக்கப்படக்கூடும்.

3. நியமன நியதிகள்.—(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும்.

(ii) நியமனங்கள், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

4. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின் வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) 1970.1.16 ந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்கவேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ஆ) (i) போக்குவரத்தை விசேட பாடமாகக் கொண்டு, அங்கீகரிக்கப் படும் ஒரு பல்கலைக் கழகத்தால் தொழில் நிருவாகத்தில், பொது நிருவாகத்தில், பொருளியலில் அல்லது வர்த்தகத்தில் வழங்கப்படும் ஒரு பட்டம் பெற்றிருப்பதுடன்

அல்லது

(ii) அங்கீகரிக்கப்படும் ஒரு பல்கலைக் கழகத்தால் தொழில் நிருவாகத்தில், பொது நிருவாகத்தில், பொருளியலில் அல்லது வர்த்தகத்தில் வழங்கப்படும் ஒரு பட்டம் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் வர்த்தக தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருப்பதுடன்

போக்குவரத்துத் துறை நிறுவனத்தின் கூட்டுறுப்பினர் தகைமைப் பரீட்சையின் ஒரு பகுதியில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(இ) தெகிவலை, காலி, கேகாலை, பொல்கொல்ல அல்லது குளியாப்பிட்டி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுவதற்கு வேண்டிய சிங்கள அறிவும் பலாலியிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியி லுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுவதற்கு வேண்டிய தமிழ் அறிவும் பெற்றிருக்க வேண்டும். நியமனத் துக்குத் தெரிவு செய்யப்படும் எவரையும் விதிக்கப்படும் ஒரு மட்டத்தில் தான் குறித்துரைக்கும் ஒரு காலத்துக்குள் சிங்களத்தில் அல்லது தமிழில் (காரியத்திற்கேற்ப) மேலும் தேர்ச்சி பெறுமாறு மகா வித்தியாதிபதி வேண்டலாம்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராய் இருகக வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங் களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.)

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப் பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்ற தாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகை மையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ் கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம் ;

குறிப்பு—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும், விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற் றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங் கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண் ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பு தல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட் டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தி யோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறி வுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற் றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக் கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 18 ந் உ.

12–1115/1—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

---

இல. A. 94/X. 2175/69.

## கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் உடற்கல்வி விரிவுரையாளர்—II ஆந் தர பதவிகள்

கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் உடற்கல்வி விரிவுரையாளர் II ஆந் தர பதவிகளுக்கு (ஆண்/பெண்) இரு பாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(i) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—1970.1.16.

(ii) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1970.1.23.

குறிப்புகள் : (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப் பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரை யிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத் தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட் [illegible]

அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத் திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப் பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல் லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதி யின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளி நாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பளமும் சகாயப் படிகளும் சேவை நிபந்தனைகளும் :**—இப் பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

(i) ரூ. 6,720—12 × 360—ரூ. 11,040 வருடாந்தம்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரி எதிலேனும் கடமை புரியவேண்டும். தற்போது காலியிடங்கள் குளியாப்பிட்டியா, கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியில் உண்டு ; தெரிவு செய்யப்படுபவர்கள் இக்கல்லூரிக்கு நியமிக்கப்படக்கூடும்.

3. **நியமன நியதிகள்.**—(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும்.

(ii) நியமனங்கள், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) 1970.1.16 ந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ஆ) (i) அங்கீகரிக்கப்படும் ஒரு பல்கலைக் கழகத்தால் உடற்கல்வியில் வழங்கப்படும் பட்டம்

அல்லது

அங்கீகரிக்கப்படும் ஒரு உடற்கல்வி கல்லூரியால் அல்லது நிலையத்தால் 2 அல்லது 3 வருட முழுநேரக் கற்கையின் பின் வழங்கப்படும் உடற்கல்வித் தகுதித் தேர்வுப் பத்திரம்.

அல்லது

அங்கீகரிக்கப்படும் ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டமும் அங்கீகரிக்கப்படும் ஒரு உடற்கல்வி கல்லூரியால் அல்லது நிலையத்தால் உடற்கல்வியில் வழங்கப்படும் ஆசிரியர்தராதரப் பத்திரமும் பெற்றிருப்பதுடன்

(ii) உடற்கல்வி வேலையை மேற்பார்வை செய்வதில் அல்லது உடற்கல்வி கற்பிப்பதில் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) தெகிவலை, காலி, கேகாலை பொல்கொல்ல அல்லது குளியாப்பிட்டி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய சிங்கள அறிவும் பலாலியிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய தமிழ் அறிவும் பெற்றிருக்க வேண்டும். நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படும் எவரையும் விதிக்கப்படும் ஒரு மட்டத்தில் தான் குறித்துரைக்கும் ஒரு காலத்துக்குள் சிங்களத்தில் அல்லது தமிழில் (காரியத்திற் கேற்ப) மேலும் தேர்ச்சி பெறுமாறு மகா வித்தியாதிபதி வேண்டலாம்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மூ.கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டைய ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித்திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 18 ந் உ.

12-1115/2—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

---

எனது இல. 1/30/144 (ஜி).

## காணி நிருணயத் திணைக்களத்தில் சேவை செய்வதற்காகப் பொது எழுதுவினைஞர் சேவையிலுள்ள எழுது வினைஞர்

காணி நிருணயத் திணைக்களத்திலுள்ள பொது எழுதுவினைஞர் சேவை வெற்றுப்பதவிகளை நிரப்புவதற்கு (அ) சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், (ஆ) சிங்களத்தில், தமிழில், ஆங்கிலத்தில் தேர்ச்சியுள்ள பொது எழுதுவினைஞர் சேவை (நி. எ. வ. II பொ. எ. வ.) உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் வரவழைக்கப்படுகின்றன ; ஏற்ற உத்தியோகத்தர்கள் பேச்சு மொழிபெயர்ப்பாளராகச் சுற்றுப்பயணக் கடமை செய்வதற்குத் தெரிந்தெடுக்கப்படும் வாய்ப்புப் பெறுவர் ; இவர்கட்குச் சாதாரண வீதத்தில் உணவுப்படியும் பயணப்படியும் நிருணய உத்தியோகத்தரின் சான்றிதழின் பேரில் மாதமொன்றுக்கு 30 ரூபா கடமைப்படியும் செலுத்தற்பாலதாகும்.

2. விண்ணப்பிப்போர் குறைந்தது சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண கட்டம்) மேலே (அ) அல்லது (ஆ) இல் கூறியுள்ள பாடங்களுடன் பெற்றிருத்தல் வேண்டும். இவ்வறிவித்தலின் நோக்கத்துக்காக திறைசேரி நடாத்தும் தேர்ச்சிச் சோதனையில் சிங்களத்தில்/தமிழில் உயர்கட்டத்தில் சித்தியடைந்தால் அது சி. பா. த. ப. அல்லது க. பொ. சா. (சாதாரண கட்டப் பரீட்சை) என்பனவற்றில் சித்தியடைந்ததற்குச் சமமாகக் கருதப்படும்.

3. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் தமது கடமைகளை அரச கரும மொழியிலும் ஆங்கில மொழியிலும் ஆற்றுவதற்கு ஒத்துக் கொள்ளல் வேண்டும். அவர்கள் உதவி நிருணய உத்தியோகத்தர் களுடன் சுற்றுப்பயணத்தில் சென்று பேச்சுமொழிபெயர்ப்பும், மொழி பெயர்ப்பும் செய்வதற்குத் தயாராயிருத்தல் வேண்டும்.

4. கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பங்கள் திணைக் களத் தலைவர்க்கூடாக காணி நிருணயத் திணைக்களம், காலிமுகச் செயலகம், கொழும்பு என்னும் முகவரியிலுள்ள நிருணய உத்தியோ கத்தரை, 1970 சனவரி மாதம் 31 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ வந்தடையத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும்.

5. விண்ணப்பங்களை அனுப்பும்போது, திணைக்களத் தலைவர்கள், அவ்வுத்தியோகத்தர் தெரிந்தெடுக்கப்பட்டால் அவர் விடுவிக்கப்படக் கூடிய தேதியையும், அவருக்குப் பதிலாள் தேவையோவென்பதையும் கூறுதல் வேண்டும்.

6. தகுதிவாய்ந்த விண்ணப்பக்காரர், தேவையாயின் கொழும்பில் நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுமாறு கேட்கப்படலாம். அத்த கைய நேர்முகப்பரீட்சையில் தமது கல்விச் சான்றிதழ்களைக் காட்டு மாறும் அவர்கள் வேண்டப்படலாம். இதன்பொருட்டு பிரயாணச் செலவும் கடமை விடுதலையும் அனுமதிக்கப்படும்.

7. மேலே கூறிய நிபந்தனைகளைத் தவிர்த்து, ஏலவே, வழங்கப்பட் டுள்ள நியமனக் கடிதங்களிற் குறிப்பிட்டுள்ள நியதிகட்கும் நிபந்தனை கட்கும் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரர் கட்டுப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

## காணி நிர்ணயத் திணைக்களத்தில் சேவை செய்வதற்கு விண்ணப்பம்

1. முழுப்பெயர், குடும்பப் பெயர் முதலில் : ————.
(பெரிய எழுத்தில்)
2. பிறந்த தேதி : ————.
3. வகுப்பும் அல்லது தரமும் அதில் சேர்ந்த தேதியும் : ————.
4. பொது எழுதுவினைஞர் சேவைக்கு நீர் எம்மொழியில் சேர்க்கப்பட்டீர் : ————.
5. தற்போதய திணைக்களமும் நிலையமும் : ————.
6. அலுவலக முகவரி : ————.
7. சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை : ————.
(அ) சிங்களத்தில் : ————.
(ஆ) தமிழில் : ————.
(இ) ஆங்கிலத்தில் : ————.
(திறமைச் சித்தியைக் குறிப்பிடுக).

————,
தேதி : ————. விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

### திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

இவ்விண்ணப்பக்காரர் பொது எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பு/நிருவாக எழுதுவினைஞர் வகுப்பின் ......ஆந் தர உத்தியோகத்தர் என நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன். அவர், 1970 .......................... (தேதி குறிப்பிடுக) ஆந் தேதியி லிருந்து. விடுவிக்கப்படுவார்/விடுவிக்கப்படமாட்டார். அவருக்குப் பதிலாக ஒருவர் தேவை/தேவையில்லை.

————,
தேதி : ————. திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

12-1094—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

---

## கமத்தொழிற்றிணைக்களம்

### முகாரி பதவி, தரம் I—பொறியியற் பிரிவு

கமத்தொழிற்றிணைக்களப் பொறியியற் பிரிவிலே I ந் தர முகாரிப் பத விக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன் கீழுள்ள மாதிரி தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 1970.1.20 தேதியிலோ முன்னரோ பிரதிப்பணிப்பாளர் (நிருவாகம்) கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை என்னும் முகவரிக்கு வந்துசேருதல் வேண்டும்.

2. **சம்பளம் :** இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்:—
ஆண்டொன்றுக்கு ரூபா 2,820—9 × 120, 8 × 180—ரூபா 5,340 ஆகும்.
திரட்டுச் சம்பளம் ஆண்டொன்றுக்கு ரூபா 5,304—9 × 144—8 × 180 —8,040.
(தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் தகைமைகளும் அனுபவமும் இச்சம்பளத்திட்டத்திலே அன்னவரை ஒருமுனையில் அமர்த்தவேண் டிய சலுகைக்கு ஆளாக்குமிடத்து திறைசேரியுடன் கலந்தாலோ சித்து நடவடிக்கை யெடுக்கப்படலாம்)

3. **நியமன நியதிகள் :** இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றிச் சம்பள உரிமை உடையதுமாகும். நியமனம் முதற்கண் 3 ஆண்டுகளுக்குத் தகுதிகாண் நிலையில் அமையும்.)

4. **தேவையான தகைமைகள் :** விண்ணப்பகாரர் திருப்தியாக நிரூ பிக்க வேண்டியன :—

(1) சிரேட்ட பாடசாலைச்சான்றிதழ்ப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண) பரீட்சையிற் சித்திபெற்று, தொழில், பயிலுற் காலம் உட்படாமல் 8 ஆண்டுகள் வேலைக்கள அனுபவம் உள்ளமை **அல்லது** கனிட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சையிலோ ஒரு சமமான கல்விப் பரீட்சையிலோ சித்தி பெற்று, தொழில் பயிலற்காலம் உட்பட 15 ஆண்டுகள் அனுப வம் உள்ளமை. பதினெட்டாண்டுக்குரிய அனுபவத்தில் நன்கு மதிக்கப்படுமொரு வேலைக்களத்திலோ அரசாங்க தொழினுட்பத் திணைக்களமொன்றிலோ மேற்பார்வை நிலைமையில் 8 ஆண்டு கள் கடமையாற்றியிருத்தல் வேண்டும்.

(2) வயதில் 20.1.70 ல் 45 க்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பங்களுடன் அனுப்பவேண்டிய பிரதிகள்—

(1) பிறப்புப்பதிவுச் சான்றிதழ்.
(2) உச்ச கல்வித் தராதரப் பத்திரம்
(3) தொழினுட்பத் தகைமை, அனுபவம் பற்றிய சான்றிதழ்.
(4) அண்மையிற் பெற்ற குணச்சான்றிதழ்கள் மூன்று.

6. விண்ணப்பங்கள் எனது சொந்தப்பெயருக்கோ இத்திணைக் களத்தின் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கோ விலசாமிடப் படுதலாகாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானப்பத்திரிகையின் 1 ஆம் பாகம் 2 ஆம் பிரிவில் வெளியிடப்படும். அவற்றையும் பார்க்குக.

எம். எஸ். பெரேரா,
கமத்தொழிற் பணிப்பாளர்.

கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை.

## கமத்தொழிற்றிணைக்களம்

### விண்ணப்பம் : முகாரி தரம் I, பொறியியற்பிரிவு

1. முழுப்பெயர் ————.
2. நிலையான விலாசம் ————.
3. 20.1.70 வயது . பிறப்புத் தேதி ————.
4. பிறப்பிடம்.——
(அ) விண்ணப்பகாரரின் தந்தை :————.
(ஆ) விண்ணப்பகாரரில் பாட்டன் : ————.
5. (அ) நாட்டினம் : ————.
(ஆ) இலங்கைப் பிரசையா ? பரம்பரையினலா ? பதிவினலா :——.
6. கல்வித் தகைமைகள்.——
(அ) சிங்களம் : ————.
(ஆ) தமிழ் : ————.
(இ) ஆங்கிலம் : ————.
7. தொழினுட்பத் தகைமைகள் : ————.
8. அனுபவம் : ————.
9. பிற விவரங்கள் : ————.
10. நற்சாட்சிப் பத்திரங்கள் தந்துள்ள முகவரினதும் பெயர்கள் :—
(அ) ————.
(ஆ) ————.
(இ) ————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மை யானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விவரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழை யானவை எனக்காணப்படின் தெரிவு, செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நட்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
தேதி : ————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

12-1111—26.12.69 ந் திகதிய வர்த்தமனி இல. 14,886

## பெருந் தெருக்கள் திணைக்களம்

### மின்சார முகாரிப் பதவி தரம் III

மின்சார முகாரிப் பதவி தரம் III க்கான விண்ணப்பங்கள் இத்திணைக்களத்தாற் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் நிரப்பப்பெற்று கீழ் "எம்", பெருந் தெருக்கள் திணைக்களப் பணிப்பாளர், பெருந்தெருக்கள் திணைக்களம், கொழும்பு 1 என்ற முகவரிக்கு 26.1.70 இல் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

2. **சம்பளம்.**— இப்பதவிக்குரிய சம்பளத்திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,152 தொடக்கச் சம்பளமாக ஆண்டிச சம்பள உயர்வு ரூபா 144 ஆக ரூபா 5,016 கடைசிச் சம்பளமாகவுள்ளது.

3. **வயது.**— விண்ணப்பகாரர்கள் 26.1.1970 இல் 21 வயதுக்குக் குறையாமலும், 27 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் ஏற்கெனவே உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.

4. **நியமன நியதிகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியப்பாற்றுச் சம்பளத் தகைமையுடையதும். நியமனம் பெறுபவர் விதவைகள் அநாதைகள் சம்பளத் திட்டத்துக்குப் பணஞ்செலுத்த வேண்டும்.

(ii) நியமனம் பெறுபவர்கள் குறுகிய கால அறிவித்தலில் நியமனத்தை ஏற்றுக்கொள்ளும்படி பணிக்கப்படுவர்.

5. **தகைமைகள்.**— விண்ணப்பகாரர்கள் பின்வருந் தகைமைகளுள் ஒன்றையாவது பெற்றிருத்தல் வேண்டும் :—

(அ) அரசாங்க மின்சார வேலைத் திணைக்களத்தில் மின்னியல் முகாரித் தேர்ச்சிப் பரீட்சையைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்துள்ளதோடு முகாரிகள் தரம் III க்குரிய குறித்த திணைக்களப் பரீட்சையில் அல்லது அதற்கொப்பான அல்லது வேறு உயர்ந்த பரீட்சையிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) கட்டுப்பாட்டாத செயன்முறைத் தொழில் நுட்ப நிலையத்தினால் நடாத்தப்படும் கனிஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) பரீட்சையில் அல்லது அதற்கொப்பான பரீட்சையில் சித்தியடைந்து கணிக்கப்படத்தக்க ஒரு நிறுவனத்தில் குறைந்தது 3 வருட வேலை அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தமது விண்ணப்பத்துடன் கீழே தரப்படுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தல் வேண்டும்:—

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் கல்வித் திட்டத்துக்கமைய வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ii) ஆக உயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(iii) பெற்றுள்ள தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ்.

(iv) முன்பு வகித்த பதவி, பெற்றுள்ள அனுபவம் ஆகியவற்றைக் குறிக்கும் சான்றிதழ்.

(v) அண்மையில் பெற்றுள்ள இரு நற்சாட்சிப் பத்திரங்கள், (அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பக்காரர்கள் இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள நற்சாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை).

7. அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தம் திணைக்கள முதலவர்களுக்கூடாக அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் அவ்வத் திணைக்கள முதல்வர்களால் குறித்த திகதிக்கு முன்னர் பெறப்பட்டதெனவும் தடுக்க முடியாத காரணங்களால் தாமதம் ஏற்பட்டதெனவும் சான்றுபகரப்பட்டாலொழிய ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. இவ்வரசாங்க வர்த்தமானியில் பகுதி I தொகுதி II இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களின் பொது நியதிகளைக் கவனிக்குக.

9. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான கடிதப் போக்குவரத்துக்கள் 1 ஆம் பந்தியில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படவேண்டுமேயல்லாது திணைக்கள உத்தியோகத்தர் எவருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

என். ஜி. விக்கிரமசிங்க,
பொருந்தெருக்கள் திணைக்களப் பணிப்பாளருக்காக.

பெருந்தெருக்கள் திணைக்களம்,
கீழ் சதம் வீதி, கொழும்பு 1,
1969 ம் ௵ டிசெம்பர் ௴ 18 ந் ௳.

## பெருந் தெருக்கள் திணைக்களம்

### மின்சார முகாரி தரம் III பதவிக்கான விண்ணப்பம்

1. (i) பெயர் (முதலெழுத்துக்களுடன்) :————.
   (ii) முழுப் பெயர் : ————.
   (பெரிய எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி : ————.

3. (i) பிறந்த இடமும் திகதியும் : ————.
   (ii) 1970.1.26 இல் வயது : ————.
   வருடங்கள் : ————. மாதங்கள் : ————.

4. இனம் : ————.
   (i) வம்சாவழிப் பிரசை அல்லது பதிவு செய்யப்பட்ட பிரசை :————.

5. பிறந்த இடம் : ————.
   (i) விண்ணப்பகாரரின் தந்தை : ————.
   (ii) விண்ணப்பகாரரின் தந்தை வழிப் பாட்டன் : ————.
   (iii) விண்ணப்பகாரரின் தந்தை வழிப் பூட்டன் : ————.

6. தற்பொழுது ஏதும் பதவி வகிப்பின் : —.
   (i) அப்பதவி : ————.
   (ii) திணைக்களம் ————.
   (iii) சம்பள விபரங்கள் : ————.

7. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகளைக் குறிப்பிடுக):———.

8. தொழில் நுட்பத் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகளைக் குறிப்பிடுக) : ————.

9. முந்திய அனுபவ விபரங்கள் : ————.

மேற் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்களில் எதுவும் பிழையானதாகவோ அன்றி பொய்யானதாகவோ காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்பட்ட பின்னராயின் எவ்வித நட்டஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரனாவேன் என அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

12-1109—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

---

இல. வெ. மு/புல/503

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பல்கேரிய அரசாங்க புலமைப் பரிசில்—1970/71

எந்திரவியலிலான முதற் பட்டத்துக்கு இட்டுச் செல்லும் பட்டமுன் படிப்புக்கு பல்கேரிய அரசாங்கத்தால் 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் வழங்கப்படும் புலமைப் பரிசில் ஒன்றை அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பின்வருவோரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா:—

(அ) நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களும் அந்நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்களுமான அரசாங்க ஊழியர்கள்.

(ஆ) சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது ஆதிக்கத்தில் நடைபெறும் தாபனங்களில் நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களும் அந்நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்களுமான வேலையாளர்கள்.

(இ) இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் யாதேனும் பயிற்சி நெறிகளைப் பின்பற்றும் மாணவர்கள்.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்து கொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

2. **கால எல்லை.**—இப்புலமைப் பரிசில் சாதாரணமாக 4–5 வருட அளவினதாகவும் பல்கேரிய மொழியில் ஒரு வருட ஆயத்த பயிற்சி நெறியைக் கொண்டதாகவும் அமையும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு பல்கேரிய அதிகாரிகளின் தற்றுணிபுக் கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்

நோத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 15.9.1970 அன்று 22 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(iv) க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சைக்குத் தோற்றி, குறைந்த, பட்சம் இவை ஒன்றில் திறமைச் சித்தியுடன் பின்வரும் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி அடைந்திருக்க வேண்டும் :—

(அ) இரசாயனவியல்.

(ஆ) பௌதிகவியல்.

(இ) கணிதம் (தூய அல்லது பிரயோக).

(தெரிவு செய்யப்படும் அபேட்சகர், விசேட படிப்பை ஆரம்பிக்குமுன் பல்கேரிய மொழியிலான ஒரு வருட பயிற்சி நெறியைப் பின்பற்ற வேண்டும்).

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 15.9.1970 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

1. பல்கேரியாவுக்குப் போவதற்கும் பயிற்சி நெறியைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்தபின் திரும்புதற்கும் மிகக்கிட்டிய மார்க்கமாக விமானமூல சிக்கன வகுப்புப் பயணம்.
2. தாபரிப்புப் படியாக மாதாந்தம் 80 லெவ்ஸ் (**levs**).
3. இலவச கற்கையும் இலவச மருத்துவ சிகிச்சையும்.
4. மாணவர் விடுதிச்சாலையில் இலவச உறையகம்.

(விவாகம் செய்த மாணவர்களுக்கு அவர்களின் குடும்பங்கள் வசித்தற்கான இடம் ஒழுங்கு செய்து கொடுபடாது).

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம் தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், பல்கேரியாவுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் பல்கேரியாவில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல் நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்தியப் பரீட்சையில் தேறவேண்டும்.

8. புலமைப் பரிசில் பெறுபவர் பயிற்சி நெறியை முடித்துக்கொண்டு திரும்பி வந்தபின் அவருக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்ளுதல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு தை மாதம் 16 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பககத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 17 ந் உ.

12–1105—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு
### வட்டார வித்தியாதிகாரிகள் பதவிகள் (விஞ்ஞானம்)

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சில் ஏற்படும் வட்டார வித்தியாதிகாரிகள் பதவிகளுக்கு ஆண்களிடமும் பெண்களிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய அச்சடிக்கப்பட்ட படிவங்களிலே தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள், 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " நிரந்தரக் காரியதரிசி, கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு, (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

**குறிப்பு**.—(i) இப்பதவிக்கு விண்ணப்பம் செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் தான் ஆசிரியராகப் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கம், பெற்றுள்ள பட்டம், பட்டப் பரீட்சைக்கான பாடங்கள், படிப்பித்தல் அனுபவம் ஆகிய விபரங்களைக் கொடுத்து, ஒரு படிவத்துக்கு, " கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளை)" எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும். படிவங்களுக்கான விண்ணப்பங்கள் 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆந் திகதிவரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். அத்தகைய விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பொ. நி. 25/18 என்ற இலக்கம் இடப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் சொந்த விலாசமிடப்பட்ட, முத்திரை ஒட்டப்படாத நீண்ட உறையும் அனுப்பப்பட வேண்டும். நேரில் வரும் எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு**.—(ii) விண்ணப்பப் படிவமேனும் அது பற்றிய எக்கடிதமேனும் அஞ்சல் செய்யப்பட்டபின் காணாமற்போனது அல்லது தாமதிக்கப்பட்டது என்ற எவ்வித குற்றச்சாட்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தமது விண்ணப்பங்களை கடைசி நாள்வரை தாமதிக்கும் விண்ணப்பதாரிகள் தாமாகவே தமக்கு ஆபத்தைத் தேடுபவராவர்.

2. **சம்பளம்**.—இப்பதவிக்கான சம்பள விகிதம் பின்வருமாறாகும் :—ரூ. 6,024—4 × 144—8 × 180—6 × 240—ரூ. 9,480 -வருடாந்தம். ரூ. 6,780 -, ரூ. 7,500 - ரூ. 8,280 - ஆகிய வருடாந்தச் சம்பளங்கள் பெறுமுன் திறமைக் கடப்புப்படிகள் உண்டு.

3. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :—**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள பிரமாணக் குறிப்பின் கீழ் இளைப்பாற்று உரித்துடையனவையுமாகும். பெண்ணொருவர் நியமிக்கப்படுமிடத்து, அவர் சேமலாப நிதி நன்மைகளுக்கு உரித்துடையவராவர் ; இந்நோக்கத்துக்கென அவர் தனது சம்பளத்தில் 5 நூற்றுவீதமும் அரசினர் சேவை சேமலாப நிதிக்கு கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படுபவர், அரசினரின்கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் இல்லாவிடின் 3 வருட காலத்துக்கு, காரியத்துக்கேற்ப, தகுதிகாண் அல்லது பரீட்சார்த்த முறையில் நியமிக்கப்படுவர்.

(ii) பெண் உத்தியோகத்தர் ஒருவர், சேமலாப நிதிக்குத் தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என, 10 வருட மொத்த சேவையைப் பூர்த்தி செய்யுமுன் எந்நேரத்திலேனும் அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நிதி நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே 10 வருட சேவை அவர் பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் ஆறு மாத காலத்துக்குள் தனது விருப்பத்தை அவர் தெரிவிக்க வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படுபவர், நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் அரசினர் விதிகளிலும் பிரமாணங்களிலும் ஒரு பரீட்சையில் சித்தியடையவேண்டும் ; அரசினர் சேவை ஆணைக் குழு விதிகளிலும் நிர்வாகப் பிரமாணங்களிலும் ஒரு வினாப் பத்திரமும் நிதி விதிகளில் இன்னொரு வினாப்பத்திரமும் கல்விச் சட்டத்தில் இன்னொரு வினாப்பத்திரமுமாக மேற்குறித்த, பரீட்சை 3 வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து அவருடைய சம்பள உயர்ச்சிப்பணம் பிற்போடப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக (இப்பரீட்சையில் சித்தி எய்துதற்கு) எடுக்கப்படும் காலம் சம்பளம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(iv) தெரிவு செய்யப்படுபவர், இரண்டாவது திறமைக் கடப்புப் படிக்கு மேலே பதவி உயர்ச்சி அளிக்கப்படமுன் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் II ந் தர உத்தியோகத்தர் ஆகியோருக்கான தேசிய மொழிகளிலுள்ள பரீட்சையில் (தமிழ் உத்தியோகத்தர்கள்) சிங்களத்திலும் (சிங்கள உத்தியோகத்தர்கள்) தமிழிலும் தகைமை பெற வேண்டும். இரண்டாவது திறமைக் கடப்புப்படி மட்டத்தைத் தாண்டியவர்கள் மூன்றாவது திறமைக் கடப்புப்படிக்குமேல் செல்லுமுன் குறித்த தகைமையைப் பெறவேண்டும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து அவருடைய சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக (இப்பரீட்சையில் சித்தி எய்துதற்கு) எடுக்கப்படும் காலம் சம்பளம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(v) உத்தியோகத்தர் ஒருவரை மேலும் சேவையில் வைத்திருத்தற்கு அவர் தகுதியற்றவரெனக் கருதப்படின் தகுதிகாண்/பரீட்சார்த்த காலத்தில அல்லது அக்கால முடிவில சேவையிலிருந்து விலக்கப்படலாம்.

(vi) தெரிவு செய்யப்படுபவர் தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

4. **தேவைப்படும் கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.—** விண்ணப்பதாரி ஒவ்வொரும் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமாக நிரூபிக்க வேண்டும் :—

(அ) 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆந் திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கும் வித்தியாதிபதி முகாமைப் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கும் இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது ;

(ஆ) பட்டதாரிகளைப் பொறுத்தவரையில்.—அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலைப் பட்டதாரியாகவும் பின்வரும் பாடங்களுள் ஒன்றைப் பட்டப் பரீட்சைக்கு எடுத்தவராகவும் இருத்தல் வேண்டும் :—

(1) தாவரவியல்,

(2) மிருகவியல்,

(3) இரசாயனவியல்,

(4) பௌதிகவியல்.

(இ) சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (சாதாரணதர) பரீட்சையில் அல்லது வேறு யாதேனும் உயர்ந்த பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில அல்லது சிங்கள/தமிழ் இலக்கியத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

(ஈ) சிறந்த நற்குணம் உடையவராகவும் தேகாரோக்கியம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலம் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும்.

(i) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்காகக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா) ;

(ii) பெற்றுள்ள கல்வித் தராதரப் பத்திரங்களும் தொழில் தராதரப் பத்திரங்களும் ;

(iii) சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை) ;

(iv) சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய பரீட்சைத் தராதரப் பத்திரம் அல்லது வேறு யாதேனும் (இதனை நிரூபிக்கும்) சான்று. அரசினர் சேவையில் உள்ளவர்கள் நற்சாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பதிலிருந்து மட்டுமே தவிர்வு அளிக்கப்படுகின்றனர்.

6. இவ்விடயம் சம்பந்தமான விண்ணப்பங்களேனும் வேறு யாதேனும் கடிதங்களேனும் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அனுப்பப்பட வேண்டுமேயொழிய அமைச்சில் கடமைபுரியும் எவ்வுத்தியோகத்தரின் பெயருக்குமல்ல.

7. அரசினர் செய்திமடலில் I ம் பகுதி, II ம் பிரிவில், பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்கும் உங்கள் கவனம் கோரப்படுகிறது.

8. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும். அரசினர், வித்தியாதிபதி முகாமைப் பாடசாலை ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு உரிய பிரதேச வித்தியாதிபதி/பிரதம வித்தியாதிகாரி மூலம் அனுப்ப வேண்டும். பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட்டு விதிக்கப்பட்ட திகதிக்குப்பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்

பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டதென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளும்படி அத்தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அங்ஙனம் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் அதுபற்றி நிரந்தரக் காரியதரிசிக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசியும் மகா
வித்தியாதிபதியும்.

தொடரெண் : பொ. நி. 25/18,
கலவி, காலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 17 ந் உ.

12–1102—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886.

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### சுழியோடி பயிலுனரின் பதவி

இத்திணைக்களத்தில் சுழியோடி பயிலுனரின் பதவிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 12.1.1970 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இவ்வலுவலகத்தில் வந்து சேரும்படியாக அவை அனுப்பப்படுதல் வேண்டும்.

2. **கல்வித் தகைமைகள் :** சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அப் பரீட்சையில் கணிதத்திலும், பௌதிகத்திலும் சித்தி அடைந்திருப்பது விரும்பத்தக்கது. அல்லது கணிதம், பௌதிகம் உட்பட ஆறு பாடங்களுடன் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களுடன் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பதுடன் ஒரு அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் தொழில் நிலையத்தில் மெக்கானிக்காக இருந்த அனுபவத்தை உடையவராக, அல்லது சுழியோடும் வேலையில் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

3. **பிற தகைமைகள் :** (1) 12.1.1970 ந் திகதியன்று 17 வயதுக்குக் குறையாமலும் 24 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(2) விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும்.

(3) மிக நல்ல உடற்கட்டும், மிகச் சிறந்த கண் பார்வையும் உடையவராக இருத்தல் வேண்டும். பயிற்சி ஆரம்பமாவதற்கு முன்னர் ஒரு விசேட மருத்துவப் பரிசோதனைக்குப் போக வேண்டும்.

4. **பயிற்சி நிபந்தனைகள் :** தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி சுழியோடியாகப் பயிற்றப் படுவதற்கு ஏற்றவரா என்பதைப் பரீட்சிப்பதற்காக முதல் ஆறு மாதங்களாக அவருக்குச் சுழியோடுவதில் பயிற்சி அளிக்கப்படும். இப் பரீட்சய காலத்தின்போது அவர் தகுதியுடையவரெனக் காணப்பட்டால் அவருக்கு 2½ வருடங்களுக்கு, மேலும் ஒரு பயிற்சி அளிக்கப்படும். பரீட்சய காலத்தில் அவர் பயிற்சிக்குத் தகுதியற்றவரெனக் காணப்பட்டால் அவருக்கு அளிக்கப்படும் பயிற்சி நிறுத்தப்படும்.

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் படம் வரைஞருக்கான, அல்லது சிறு மேற்பார்வையாளருக்கான, அல்லது அளவையாளர்—மட்டம் பார்ப்பவருக்கான ஒரு வருட பகல் நேரப் பயிற்சி நெறியை வெற்றிகரமாக முடித்த பரீட்சார்த்திகளுக்குப் பயிற்சிக் காலம் இரு வருடங்களாகும்.

பயிலுனராக இருக்கும் காலத்தில் இத்திணைக்களம் நடாத்தும் பரீட்சைகளுக்கு பரீட்சார்த்தி தோன்ற வேண்டும். இப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்னர் சுழியோடியின் வேலைக்குத் திறமை வாய்ந்தவரென்றும், தகுதியுடையவரென்றும் பரீட்சார்த்தி உறுதிப்படுத்தினால் அவர் இந் திணைக்களத்தில் ஒரு கடற்படைச் சுழியோடியாக (நேவி டைவராக) நியமிக்கப்படுவதுபற்றி ஆலோசிக்கப்படும். கடற்படைச் சுழியோடியாக 3 வருடங்கள் கழிந்த பின்னர் அவர் மேலும் பயிற்சிக்கு உகந்தவரெனக் காணப்பட்டால், கப்பல் ஓடாவி (ஷிப் றயிட்) சுழியோடியாக அவர் தேர்ச்சி பெற உதவும்பொருட்டு வெளிநாட்டில் அவருக்குப் பயிற்சி அளிப்பதற்கிருக்கும் வசதிகளைப் பொறுத்து, இத்திணைக்களம் நிச்சயிக்கும் இடத்தில் அதாவது ஐக்கிய இராச்சியத்தில் அல்லது வேறேதுமொரு நாட்டிலுள்ள ஒரு கப்பற் தளத்தில் 1½ வருட காலம் அவருக்குப் பயிற்சி அளிக்கப்படுவதுபற்றி ஆலோசிக்கப்படும். ஒரு கப்பல் ஓடாவி (ஷிப்றயிட்) சுழியோடியின் வேலைக்கான விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சியைத் திருப்திகரமாக முடித்ததும் அவர் இந்திணைக்களத்தில் ஒரு சுழியோடியின் பதவியில் நியமனம் செய்யப்படுவார்.

5. **சம்பள வீதம் :** பயிற்சியின்போது பயிலுனருக்குச் சம்பளம் பின்வருமாறு கொடுக்கப்படும் :—

1 ஆவது வருடம்—ரூபா 2.80 நாள் ஒன்றுக்கு.

2 ஆவது வருடம்—ரூபா 3.20 நாள் ஒன்றுக்கு.

3 ஆவது வருடம்—ரூபா 3.60 நாள் ஒன்றுக்கு.

கடற்படைச் சுழியோடியாக (நேவி டைவராக) நியமனம் செய்யப்பட்டதும் ரூபா 6,304—144&180—8,040 வருடாந்தச் சம்பள அளவுத் திட்டத்தில் அவருக்குச் சம்பளம் வழங்கப்படும்.

ஒரு சுழியோடியாக நியமனம் செய்யப்பட்டதும் ரூபா 9,240—360—11,040 வருடாந்தச் சம்பள அளவுத் திட்டத்தில் அவருக்குச் சம்பளம் வழங்கப்படும்.

6. **உடன்படிக்கை :** பரீட்சய காலத்தைத் திருப்திகரமாக முடித்த பின்னரும் பயிற்சியைத் தொடர்ந்து பயிலத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி அனுமதிக்கப்பட்டால் அவர் பயிற்சியைத் திருப்திகரமாக முடித்து, அதன் பின் ஐந்து வருடங்களுக்காவது இத்திணைக்களத்தில் சேவை செய்வதாக அவரும் அவருடைய பாதுகாவலரும் ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும். இந்த உடன்படிக்கையின் பிரகாரம் கப்பற்றுறை ஆணையாளர் நிச்சயிக்கும் ஒரு தொகையை வைப்புப் பணமாகக் கட்டுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி உடன்படிக்கையின் பிரகாரம் செய்துகொள்ளத் தவறினால் வைப்புப் பணமாகக் கட்டிய தொகை பறிமுதலாகும்.

இதன்பின்னர் ஒரு கப்பற்றளத்தில் பயிற்சி பெறுவதற்கெனப் பரீட்சார்த்தி தெரிவு செய்யப்பட்டால், அவர் அப்படியான பயிற்சிக்கெனப் பயணமாவதற்கு முன்னர், அப்பயிற்சியின் முழுச் செலவுக்கும் ஈடாக ஒரு முறியிலும் ; பயிற்சி முடிந்து திரும்பியதும் அரசாங்கத்தின் கீழ் ஐந்து வருடகாலம் சேவை செய்வதாக இன்னும் ஒரு உடன்படிக்கையிலும் அவர் கைச்சாத்திடுதல் வேண்டும்.

7. பரீட்சார்த்திகள் தங்கள் வயது, தகைமைகள் என்பவற்றின் முழு விபரங்களையும் தருவது மிக முக்கியமாகும். இத்தேவையின் பிரகாரம் செய்யத்தவறியவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அண்மையில் பெற்ற மூன்று நற்சான்றிதழ்களின் பிரதிகளை (மூலங்களை அல்ல) விண்ணப்பங்களுடன் அனுப்புதல் வேண்டும்.

8. இந்த வர்த்தமானியின் I ஆம் பகுதி, II ஆம் தொகுதி ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1, 1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு
### சுழியோடி பயிலுனரின் பதவி

1. முழுப் பெயர் : ————.
2. முகவரி : ————.
3. வயதும், பிறந்த நாளும் : ————.
4. விவாகமானவரா, ஆகாதவரா ? ————.
5. கல்வித் தகைமைகள் : ————.
6. தொழில் நுட்பத் தகைமைகள் ஏதாவது இருந்தால், விபரம் தருக : ————.
7. விளம்பரத்தின் பிரகாரம் தகைமைகள் உண்டா ? ————.
8. பிணைப்பணம் கட்ட முடியுமா ? ————.

இவ் விண்ணப்பத்தில் தந்துள்ள விபரங்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் நான் பிரகடனப் படுத்துகிறேன்.

————————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

12–1138—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

## கைத்தொழில் கடற்றொழில் அமைச்சு

### புள்ளி விபர உத்தியோகத்தர் பதவிகள்

கைத்தொழில் கடற்றொழில் அமைச்சில் (கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு) புள்ளி விபர உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்தில் 31.1.1970 ம் தேதியன்றோ அன்றி அதற்கு முன் பாகவோ கைத்தொழில் கடற்றொழில் அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

2. **திரட்டிய சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவு, 144 ரூபா கொண்ட 6 படி ஏற்றங்களும், 180 ரூபா கொண்ட 8 படி ஏற்றங்களும், 240 ரூபா கொண்ட 6 படி ஏற்றங்களும் அமைந்து ரூபா 6,780, ரூபா 7,500, ரூபா 8,280 க்கும் முன்னே திறமைத் தடைகள் இயங்குவதாயும் இருக்கும். திரட்டிய சம்பளம் ஆண்டுக்கு ரூபா 5,736 தொடக்கம் ஆண்டுக்கு ரூபா 9,480 வரை உயரும்.

(மேற்கூறிய வேதன விகிதம், 120 ரூபா கொண்ட 6 படி ஏற்றங்களும், 180 ரூபா கொண்ட 8 படி ஏற்றங்களும், 240 ரூபா கொண்ட 6 படி ஏற்றங்களும் அமைந்து வருடமொன்றிற்கு ரூபா 3,180 தொடங்கி, ரூபா 6,780 வரை உயர்வதாகும். ரூபா 4,080, ரூபா 4,800, ரூபா 5,580 க்கும் முன்னே திறமைத் தடைகள் இயங்கும் 1.10.1969 ற்கு முந்திய வேதன விகிதத்தைச் சார்ந்தது.

3. **சேவை நிபந்தனைகள்.**—இப்பதவி நிரந்தரமானதும், இளைப்பாறற் படி உடையதுமாகும். விதவைகள் அநாதைகள் இளைப்பாற்றற்றிட்டத்திற்கு உதவுதொகை செய்யப்படும்.

4. **கல்வி சம்பந்தமானதும் ஏனைய தகைமைகளும்.**—ஒவ்வோர் விண்ணப்பதாரர்களும்,

(அ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் கீழ்வரும் பாடங்களில் ஒன்றினையுடைய பட்டதாரியாகவிருத்தல் வேண்டும்:

பொருளாதாரம்
புள்ளிவிபரம்
கணிதம்

1 வது அல்லது 2 வது வகுப்பு சிறப்புப்பட்டம் பெற்ற பட்டதாரி களுக்கு முதன்மை அளிக்கப்படும்.

(ஆ) 31.1.1970 ம் தேதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். பொது சேவையில் ஏற்கனவேயுள்ள உத்தியோகத்தர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு இணங்கியதாகா.

5. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் கீழ்வருவன வற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகளல்ல) இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவு சான்றிதழ் (ஞானஸ்நான சான்றிதழ்களோ அல்லது உதவிபெறும் பாடசாலைகட்கு பிரமாணச்சட்டத் கோவைக் கென வழங்கப்பட்ட சான்றுப் பத்திரங்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

(ஆ) பெறப்பட்ட அதி உயர்ந்த கல்வி சம்பந்தமான அல்லது தொழில் சம்பந்தமான சான்றுப்பத்திரம்.

(இ) விண்ணப்பதாரரின் நடத்தைபற்றி அண்மையிற் பெறப்பட்ட நற்குணசாட்சிப் பத்திரங்கள். (ஏற்கனவே பொது சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் இத்தகை நன்னடத்தைப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை).

**குறிப்பு.**—இத்தராதரப் பத்திரங்களும், நற்குணப்பத்திரங்களும் திருப்பி அனுப்பப்படமாட்டா.

6. இவை சம்பந்தமான விண்ணப்பங்களோ அன்றி ஏனைய தொடர்பு களோ, கைத்தொழில் கடற்றொழில் நிரந்தரச் செயலாளருக்கேயன்றி, இவ்வமைச்சிலுள்ள வேறு உத்தியோகத்தருக்கு அனுப்பக்கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள், அவரவர் திணைக்களத் தலைவர்கட்கூடாகவே அனுப்பப்படல் வேண்டும். திணைக் களத்தலைவரால், குறிக்கப்பட்ட தேதிக்கு முன்பாக விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு, தாமதத்திற்கான தகுந்த காரணங்களைக் காட்டி, ஏற்பதனை விதப்புரை செய்யப்பட்டாலன்றி, இக்குறிப்பிட்ட தேதிக்குப் பின்பாக இவ்வலுவலகத்திற் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. இவ்வர்த்தமானியின் I ம் பாகத்தின் II ம் பிரிவின் முற் பாகத்திற் பிரசுரிக்கப்பட்டுள்ள பொது சேவைப்பதவி நியமனங்களுக்குரிய தான பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

ஏ. எல். பீ. கே. பெரேரா,
நிரந்தரச் செயலாளருக்காக,
கைத்தொழில் கடற்றொழில் அமைச்சு.

கைத்தொழில் கடற்றொழில் அமைச்சு,
48, ஸ்ரீ ஜினரத்தின வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 17 ந் உ.

### குறிப்பிட்டுள்ள மாதிரிப் படிவம்

#### புள்ளி விபர உத்தியோகத்தர் பதவி—கைத்தொழில் கடற்றொழில் அமைச்சு

1. விளம்பரத்திற்கான தொடர்பு : ————.
2. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் : ————.
3. தபால் விலாசம் : ————.
4. (அ) பிறந்த தேதியும் வயதும் : ————.
(பிறப்புச் சான்றுப் பத்திரம் இணைக்கப்படல் வேண்டும்)
(ஆ) விவாகம் ஆனவரா, இல்லையா : ————.
5. சாதியமும் எவ்வாறு பெறப்பட்டதென்பதும் : ————.
6. பிறந்த இடம் :
*(அ) விண்ணப்பதாரர் : ————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை : ————.
(இ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பூட்டன் : ————.
7. இறுதியாகச் சித்தியெய்திய பரீட்சையின் கல்வித் தகைமைகளும் பாடங்களும் (திகதிகளுடன்) : ————.
8. சர்வகலாசாலை/பாடசாலையை விட்டு விலகியது முதல் செய்த வேலை திகதிகளுடனும், அரசாங்கத்தில் ஏதாவது பதவி வகித்திருப்பின் முழு விபரங்களும் : ————.
9. சிங்களம், தமிழ எழுத்து வாசிப்புத் தகுதி : ————.
10. விசேட தகைமைகள் யாதாயினும்—அதாவது தொழில் சம்பந்த மான முதலிய : ————.
11. நற்குணச் சான்றிதழ்கள் யாரிடமிருந்து பெறப்பட்டதோ அவர்களின் பெயர்களும் பதவிகளும் (இத்தகைச் சான்றுப் பத்திரங்களின் பிரதிகளேயன்றி மூலப்பிரதிகள் இணைக்கக் கூடாது) : ————.
12. யாதாயினும் விசேட தகைமைகள் (உ–ம் இத்தகைப் பதவிகளிலுள்ள அனுபவம்) : ————.

————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி ————.

*விண்ணப்பதாரர் இலங்கையிற் பிறந்திருப்பின், (ஆ) அல்லது (இ), (ஈ) இரண்டும் (அ) வுடன் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இலங்கையிற் பிறவாதிருப்பின், (ஆ) வும் (இ) யுமோ அன்றி (ஈ) யும் (உ) வும் (அ) வை விட நிரப்பப்படல் வேண்டும்.

12–1178—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886.

---

## சமூக சேவைத் திணைக்களம்

### வேலைத்தல மேற்பார்வையாளர்

1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ந் தேதி பிரசுரிக்கப்பட்ட " கசெற் " சார்பாக அறிவிப்பதாவது, இப் பதவிக்குரிய விண்ணப்பங்களின் முடிவு பத்திரிகையில் வெளியான 28.11.69 தேதியைக் கொண்ட அறிவித்தல் தேதி, 12.1.1970 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைத் திணைக்களம்,
த. பெ. இல. 577,
சாரணச்சிறுர் வீதி,
காலிமுகம்,
கொழும்பு–3, 20.12.69.

ஏ. எம். எம். சகாப்தீன்,
சமூக சேவைத் திணைக்கள அதிகாரி.

12–1088—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

## ஆயுள்வேதக் கல்லூரி—பகுதி நேர விரிவுரையாளருக்கான பதவி—தமிழ்மொழி மூலம்

ஆயுள்வேதக் கல்லூரியில் தமிழ்மொழி மூலம் சமஸ்கிருதம கற்பிக்க ஒரு பகுதி நேர விரிவுரையாளர் தேவை.

**தகைமைகள் :—**

(1) பி. ஏ. பட்டதாரி,

(2) தமிழ்மொழி கற்பித்த அனுபவம்,

**விரிவுரைகள் :—**

நாளுககு இரு மணித்தியாலங்களாக ஒரு கிழமையில் பத்து (10) மணித்தியாலங்கள் அளவில்.

**வேதனம் :—**

மணித்தியாலத்திற்கு ரூபா 5/–

தகைமைகள், அனுபவம் முதலியன குறிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தினை 1970 ஆண்டு ஜனவரி மாதம் பத்தாம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

அதிபர்,
அரசினர் ஆயுள்வேதக் கல்லூரி.

அரசினர் ஆயுள்வேதக் கல்லூரி,
பண்டாரநாயக புர,
இராஜகிரியை,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 13 ந் உ.

12–1142—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பரீட்சைத்திணைக்களம், இலங்கை

### கமத்தொழிற்றிணைக்களத்துக்கு ஆய்கூட உதவியாளர் சேர்ப்பதற்கான பரீட்சை

கமத்தொழிற்றிணைக்களத்தின் ஆய்கூட உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை 1970 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14ம் தேதி கொழும்பில் நடாத்தப்படும். இப்பதவிகளுக்கு ஆண்கள் மட்டும் போட்டியிடலாம். இப்பதவிகளுக்கும் தேவையான தகைமைகள், சேவை நிபந்தனைகள் ஆகியவற்றை இதனகீழ்க்காணுக.

1. இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் (திரட்டுச் சம்பளம்) :

(அ) ஆண்டொன்றுக்கு தரம் 1 ரூபா 5,304—8 × 114—6,456.

(ஆ) ஆண்டொன்றுக்கு தரம் 2 ரூபா 3,144—15 × 144—5,304 வி. தி. கா. த. ரூபா 3720/–க்கும் ரூபா 4,584, க்கும் முன்னர்.

(இ) ஆண்டொன்றுக்கு தரம் 3 ரூபா 2,760—4 × 60, 17 × 90—4530 வி. தி. கா. த. ரூபா 5,360க்கும் ரூபா 3,720க்கும் முன்னர்.

**குறிப்பு.**—எப்பொழுதாயிரும் தரம் 2ல் உள்ள பதவிகளின் எண்ணிக்கையில் ஆறிலொன்றுககு மேற்பட தரம் 1 ன் பதவிகளின் எண்ணிக்கை அமையாது. தரம் 1க்கான நியமனங்கள் தரம் 2 ல் உள்ள உத்தியோகத்தர்களிடையே முதுமுறை, சிறபபுத்திறமை ஆகியவற்றுக்கமைவாகத் தெரிவு செய்தலால் அமையும். தரம் 3ககுரிய நியமனங்கள் ஆய்கூட உபதுணைவர்த் தரத்திலிருந்து செய்யப்படும்.

2. **சேவை நிபந்தனைகள் :**

(1) இப்பதவிகள் நிலையானவையும் உபகாரச் சம்பளத்துக்குரியனவையுமாகும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் விதவை அநாதர் இணைப்பாற்றிச் சம்பள நிதிக்கு உதவுதல் வேண்டும்.

(2) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஈராண்டுக் காலத்துககு ஒரு பயிறசி நெறியைப் பின்பற்ற வேண்டியவராவர். முதலாண்டுப் பயிற்சி விவசாய விஞ்ஞானக் கொள்கை, கால்நடை வளர்ப்பும் மிருக வைத்தியமும், விவசாய இரசாயனம், விவசாயத் தாவரவியல, பூச்சியியல, தாவரநோயியல் ஆகியவற்றுள் தெரிவு செய்யப் படும் ஒரு பிரிவிலே விரிவுரை, செய்முறை ஆகியவற்றினால் எல்லைப்படுத்தப்படும். முதலாண்டு முடிவிலே ஒரு பரீடசை நடாத்தப்படும். இப்பரீட்சையிற சித்திபெறத் தவறும் அபேட்சகர்கள் நிறுத்தப்படவேண்டியவராயினும் எல்லாமாக மூன்று எத்தனிப்புகள முடியுமவரை மேலும் வாய்ப்பு அளிக்கப்படுவர். இரண்டாமாண்டு கமத்தொழிற்றிணைக்களத்தின் தாவரவியல், விவசாய இரசாயனம், தாவரநோயியல், பூச்சியியல், மிருகவைத்தியம் ஆகிய ஆராய்ச்சிப் பிரிவுகளுள் ஒனறனதலைவருக்குக்கீழ செய்முறை பயிலற்குரிய காலமாகும். ஈராண்டுககு மேற்படாத காலத்தில் உட்டுறைப் பயிற்சிக்காலத்தில வேலையும் நடத்தையும் அதிருப்தி நிலையிற் காணப்படும் அபேடசகர்கள் விடயம் கமத்தொழிற்பணிப்பாளரின் தீர்மானதுக்குரியது.* ஈராண்டுப் பயிற்சி நெறியை வெற்றியாக நிறைவேற்றும் அபேட்சகர்கள் மூன்று ஆண்டுத் தகுதிகாண் நிலையில் தரம் 2 ஆய்கூட உதவியாளராக நியமனம் பெறுவர்.

(3) முதலாண்டு முடிவில் நடாத்தப்படும் பரீட்சையின் முடிபுகளுக்கமைவாக அபேட்சகர்களின முதுமுறை தீர்மானிக்கப்படும். உட்டுறைப் பயிற்சிக்காலம் நீடிக்கப்படும் அபேட்சகர்கள் ஏனையோரினும் கனிட்டராவர்.

(4) பயிற்சிக்காலத்தில் ஆண்டொன்றுக்கு ரூபா 900 படியாக வழங்கப்படும். இந்தப் படிக்குரிய வாழ்க்கைச் செலவுப்படியும் வாழ்க்கைச் சிறப்புப்படியும் கொடுபடும். ஆனால் வாடகைப்படி சேர்க்கப் படமாட்டாது. நீடிப்புக காலத்தில் எவ்விதமான படியும் கொடு படமாட்டாது.

(5) பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் பயிற்சி வகுப் பிறசேரும் தேதியிலிருந்து ஏழு ஆண்டுக்காலத்திற்கு கமத்தொழிற்றிணைக்களத்திற் சேவை செய்யவும் தவறும்போது பயிற்சிக்காலத்தில் அவர்கள் பெற்றுள்ள எல்லாச் சம்பளங்களையும் படிகளையும் மீளளிக்கவும் பிணைநிற்போருடன் சேர்ந்து ஒரு உடன்படிக்கையிலும் முறியிலும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

(6) ஆய்கூட துணைஉதவியாளர் தரத்திலும் ஆய்கூட உதவியாளர் தரத்திலுமிருந்து சேர்க்கப்படும் அபேட்சகர்கள் பயிற்சிக்காலத்தில் பதில் நிலைமையில் நியமிக்கப்பட்டு மேலே பந்தி (2) ல் சொல்லப்பட்ட பரீட்சையிற் சித்தி பெறும்போது பதவிகளில் உறுதிப்படுத்தப்படுவர். இந்தப் பரீட்சையிற் சித்திபெறத் தவறுவோர் அவர்களின் நிலையான பதவிக்கு மாற்றப்படுவர்.

(7) ஆய்கூட உதவியாளர் வாரத்தில் ஏழு நாட்களும் வேலைசெய்பவர். எனவே, அவர்கள் அரசாங்க விடுமுறைகளும் நோன்மதி நாட்களும் உட்பட வாரத்தில் ஏழு நாட்களும் அரசினர் வேலை செய்ய வேண்டியவராவர். வாரத்தில் எந்நாளிலும் பகல் அல்லது இரவு முழுமையும் வேலை செய்ய அழைக்கப்படின் அவர்கள் வேலைக்கு வரத்தயாராகவிருத்தல் வேண்டும். இத்தீவின் எப்பகுதியிலும் அவர்கள் சேவைபுரிய சித்தமாயிருத்தல் வேண்டும்.

(8) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் 1965 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்டத்தின் நிபந்தனைகளுக்கும், அரசின் மொழிக்கொள்கையை செயற்படுத்த இப்போது நடைமுறையிலிருக்கும் அல்லது இனிமேல் புகுத்தப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

(9) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் அவர்களின் தகுதிகாண்/சோதனை நிலைக்காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சிபெறல் வேண்டும். அவர்களின் தகுதிகாண்/சோதனை நிலை முடிவடையும்போது பதங்களில் உறுதிப்படுத்தப்படுதல் பிறவற்றுடன் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுதலையும் பொறுத்ததாகும்.

(10) தகுதிகாண்/சோதனை நிலைக்காலத்தில் விதிக்கப்படும் சிங்கள மொழித்தேர்ச்சியைப் பெறத்தவறும் அபேட்சகர்கள் சேவையிலிருந்து நிறுத்தப்படநேரலாம்.

(11) சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையிற் சேரத்தகைமை பெறும் உத்தியோகத்தர் சிங்களமொழிச் சோதனைகளிலிருந்து விதிவிலக்களிக்கப்படுவர்.

**குறிப்பு :**

(அ) ஆய்கூட உதவியாளர் நியமனங்களிற் சேருங்காலத்தில் " முன் சேர்ந்தவர் " எனக்கருதப்படும் அபேட்சகர்கள் மேலே துணைப் பந்திகள் (9), (10) ல் காணப்படும் தேவைப்பாடுகளிலிருந்து விலக்கப்படுவர்.

(ஆ) தரம் 3ல் 24.9.56க்கு முன்னர் நிலையான நியமனங்கள் பெற்றுள்ள ஆய்கூடத்துணை உதவியாளரும் ஆய்கூட உதவியாளரும் தரம் 2ல் ஆய்கூட உதவியாளர் நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படின் அரசகரும மொழிக்கொள்கை நோக்கத்துக்கு அவர்கள் " முன்சேர்ந்தர்வகள் " எனக்கருதப்படுவர்.

3. **தேவையான தகைமைகள் :**

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் திருப்தியான நிறுவல் சமர்ப்பிக்க வேண்டியன :—

(அ) வயதில் 14.3.70ல் 17க்குக் குறையாமையும் 25க்கு மேற்படாமையும் (கீழ்சொல்லப்படும் பந்திகள் (ஆ) (2) (4) ல் சொல்லப் படும் அபேட்சகர்கள் விடயத்தில இந்த உச்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது).

(ஆ) (1) கல்விப்பொதுத்தராதர சாதாரணப் பத்திரப் பரீட்சையில் இரசாயனவியலில் திறமைச்சித்தியும் எந்தவொரு அமர்விலும் பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றுள் ஒன்றிலே திறமைச்சித்தியும் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் தேறலும் அல்லது, (2) (அ) சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி, (ஆ) கணிதம், எண் கணிதம் அல்லது வர்த்தககணிதம், (இ) இரசாயனம் (திறமைச் சித்தி) ஆகியவையும், (ஈ) பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றுள் ஒன்றிலே திறமைச்சித்தியும் உட்பட இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் கல்விப்பொதுத் தராதர சாதாரண பரீட்சையிற் சித்தி.

குறிப்பு.—இரு அமர்வுகளுக்கு மேற்படாத முறையில் (அ), (ஆ) உட்பட ஆறு பாடங்களில் கல்விப்பொதுத்தராதரப் பரீட்சையிற் சித்தி பெற்றிருப்பின் (இ), (ஈ) வெவ்வேறான அமர்வுகளிற் பெற்றிருப்பினும் அது போதுமானதாகும் அல்லது,

(3) கமத்தொழிற்றிணைக்களத்தில் உள்ள, சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையிற் சித்தியடைந்து 3 ஆண்டுச் சேவைக் காலத்தைச் செவ்வனே கழித்த, 3ம் தர ஆய்கூட உதவியாளர் அல்லது ஆய்கூடத் துணை உதவியாளர் அல்லது,

(4) கமத்தொழிற்றிணைக்களத்திலுள்ள, கனிட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சைச் சித்தியுடன் 5 ஆண்டுச் சேவைக்காலத்தைச் செவ்வனே நிறைவேற்றிய, 3ம் தர ஆய்கூட உதவியாளர் அல்லது ஆய்கூடத் துணை உதவியாளர்.

4. பரீட்சை மொழி.—

இப்பரீட்சைக்குப் புகுதலுக்குத் தகைமையளிக்கும் பரீட்சை எழுதிய மொழியிலேயே (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) இப்பரீட்சை எழுதப்படுதல் வேண்டும் :—

(அ) தகைமையளிக்கும் பரீட்சைப் பாடங்கள் வெவ்வேறு மொழிகளில் எழுதிச் சித்தி பெற்றிருக்கும் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் அவ்வப் பாடங்கள் அம்மம் மொழிகளில் எடுக்கலாம். மறுபாடங்களை மொழியும் கட்டுரையும் (முதலாம் வினாத்தாள்) எழுதப்படும் மொழியிலேயே எடுத்தல் வேண்டும்.

(ஆ) மேலே பந்தி 4ல் விதிக்கப்பட்டுள்ள தகைமைப் பரீட்சைச் சித்தியைப் பொருட்படுத்தாது இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படும் இத்திணைக்களத்தில் வேலை செய்யும் அபேட்சகர்கள் அவர்கள் கல்வி கற்ற மொழியிலேயே இப்பரீட்சை யெழுதுதல் வேண்டும்.

(இ) தமிழ்மொழி அல்லது ஆங்கில மொழி மூலம் கல்வித் தகைமைகள் பெற்றுள்ளோரும் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றோரும் இப்பரீட்சையை சிங்கள மொழியில எடுத்துக் கொள்ளலாம்.

5. எழுத்து மூலமான பரீட்சையில் திருப்தியான தராதரத்தை அடையும் பரீட்சார்த்திகள் வாய்மொழிப் பரீட்சைக்கு வருகை தருதற்கு தெரிவு செய்யப்பட்டு, தேதி, நேரம், இடம், காலக்கிரமத்தில் தனித்தனி அறிவிக்கப்படுவர். கமத்தொழிற் பணிப்பாளரினால் நியமிக்கப்படும் சபையினரால் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும். இது சம்பந்தமாக பிரயாணச் செலவோ பிற செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றையும் பார்க்குக.

7. (1) இப்பரீட்சைக்குப் பிரவேசித்தற்குரிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவித்தலின் அடிப்பகுதியில் தரப்பட்டுளது. நீளப்பாட்டு அரைத்தாளில் விண்ணப்பப் படிவத்திற் கேட்கப்படும் விவரங்களை நிரப்பி அனுப்பலாம். விண்ணப்பத்தின் 8 ம் பந்தி தாளின் பின்பக்கத்தில் அமைத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில " விவசாயப் பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி), விவசாய ஆராய்ச்சி மத்திய தாபனம், கண்ணொறுவ, பேராதனை " என்னும் முகவரிக்கு 1970.1.17 தேதியன்றோ முன்னரோ வந்து சேருதல்வேண்டும்.

உரிய தேதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விண்ணப்பமுள்ள உறையின் இடது கரை மேல்மூலையில் பரீட்சைப் பெயர் விளக்கமாக எழுதப்படுதல் வேண்டும்.

(3) விண்ணப்பம் ரூபா 25.00 பெறுமதியுள்ளதும் முறைப்படி அழிக்கப்பட்டதுமான முத்திரைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஏற்கனவே அரசாங்கத் திணைக்களங்களில் அலுவல் பார்க்கும் பரீட்சார்த்திகள், அவர்கள் கடமையாற்றும் அரசாங்கத் திணைக்களத் தலைவர்களினூடாகவே அவர்களின் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ந தேதியன்றோ முன்னரோ கமத்தொழிற் பிரதி (ஆராய்ச்சி) பணிப்பாளரிடம் சேரும்வண்ணம் அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் ஒன்றையும் செய்து பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்களத் தலைவர்களுக்கு நேரகாலத்தோடேயே அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கமத்தொழிற் பணிப்பாளரினதோ வேறெந்த உத்தியோகத்தரினதோ சொந்தப் பெயர் உள்ள முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்புதலாகாது.

(5) விண்ணப்பகாரரின் கையொப்பம் அதிகாரமளிக்கப்பட்டவொருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்டவர்கள்: சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, அரசினர் அல்லது பணிப்பாளரின் முகாமைப்பாடசாலையொன்றின் அதிபர், கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகியவற்றின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், ஆண்டொன்றுக்கு 4,800 ரூபாவோ மேலோ சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர், விகாராதிபதி அல்லது பௌத்த கோயிலின் உயர்குரு, அல்லது வணக்கத்துக்குரிய தலமொன்றினது பொறுப்பாளராகவிருக்கும் அன்றேல் முக்கியத்துவமான பதவியொன்றை வகித்து வரும் பிற சமயக்குரு.

8. பரீட்சைக்கு அனுமதி.—

(1) கமத்தொழிற்பணிப்பாளர் தாம் ஏற்றுக்கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகளுக்கெல்லாம் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள், அப்பரீட்சையை மேற்பார்வையிடுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்குத் தங்கள் அனுமதிப் பத்திரங்களைக் காட்டுதல் வேண்டும். அத்தகைய பத்திரத்தைக் காட்டத் தவறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

பரீட்சார்த்திகள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எடுத்தல் வேண்டும். தமக்குக் குறிக்கப்பட்டதல்லாத பிறிதொரு பரீட்சை மண்டபத்திற் சமுகமளிக்கும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

இப்பரீட்சைக்குரிய நேரசூசி இதனுடன் அச்சிடப்படுகின்றது. பரீட்சார்த்திகளுக்கு பிறம்பான நேரசூசி பிரதி அனுப்பப்படமாட்டாது.

இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளுக்குரிய விதிகள் வேறாக அச்சிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ்விதிகளுக்குக் கட்டுப்பட்டவராவர்.

பரீட்சைத் தேதிக்கு நேரகாலத்திலே (குறைந்தபட்சம் எழு நாட்களுக்கு முன்னர்) அனுமதிப்பத்திரம் பெறாத பரீட்சார்த்திகள், விவசாய ஆராய்ச்சி மத்திய தாபனம், கண்ணொறுவ, பேராதனை என்னும் விலாசத்திலுள்ள கமத்தொழில் (ஆராய்ச்சி) பிரதிப்பணிப்பாளருடன் (தந்தி விலாசம் : அக்கிறிசேச்சு, கண்ணொறுவ, பேராதனை) உடனடியாகத் தொடர்புகொண்டு அனுமதிப்பத்திரத்தைத் தான் இதுகாறும் பெறவில்லையென அறிவித்துக் கீழ்வரும் தகவலையும் கொடுத்தல் வேண்டும் :—

(அ) பரீட்சையின் பெயர் :————.

(ஆ) முழுப்பெயர் :————.

(இ) முழுத்தபால் விலாசம் :————.

(ஈ) பரீட்சை நிலையம் :————.

(உ) தபாற்கந்தோர், பதிவு இலக்கம், விண்ணப்பம் அனுப்பிய தேதி :————.

(2) பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதைத் தகுதி ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதக்கூடாது.

கமத்தொழிற்பணிப்பாளர் தமது உசிதாரப்படி பரீட்சார்த்தியொருவருக்கு இப்பரீட்சையை எடுப்பதற்குத் தற்காலிகமாக அனுமதி வழங்கலாம். அத்தகைய பரீட்சார்த்தி பரீட்சையெடுத்தமை பின்னர் ஒன்றில் உறுதிப்படுத்தப்படும் அல்லது தள்ளுபடி செய்யப்படும்.

**9. அடையாளச் சீட்டுக்கள்.—**

பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வோர் பாடத்துக்கும் பரீட்சை மண்டபத்திலே மேற்பார்வையாளர் திருத்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்துக்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) தபாற் சந்தோர் தலைமை அதிபதி வழங்கிய அடையாளச்சீட்டு.

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு முன்னர் 3 ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு கடவுச் சீட்டு.

(இ) இப்பரீட்சைத் தேதிக்கு முன்னர் 3 ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் ஓர் அரசாங்கத் திணைக்களத்தின், கூட்டுத்தாபனத்தின், நியதிச்சட்டமுறையான சபையின் அல்லது அதிகாரியின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும் வைத்திருப்பவரின் புகைப்படமொன்றைத் தன்னகத்தே கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப்பத்திரம், உத்தரவுப்பத்திரம் அல்லது பிறசாதனம்.

(ஈ) கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தற்குத் தகைமை வாய்ந்தவொருவரினால் படத்தின் பின்புறத்தில் எழுதப்படும் பின்வருமாறான சான்று பகர்வு உள்ள, கடவுச்சீட்டுக்குரிய பருப்ப ஒளிப்படம் :

" இதன்கீழ் கையொப்பமிட்டுள்ள ......................
(அபேட்சகரின்முழுப் பெயர்)

அவர்களின் ஒளிப்படமே மறுபக்கத்தில் உள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்."

..............................
அபேட்சகரின் கையொப்பத்துக்குச் சான்று பகருபவரின் கையொப்பம்.

..............................
பெயர், பதவிப்பெயர், தேதி.

..............................
விண்ணப்பகாரரின் வழமையான கையொப்பம்.

சொல்லப்பட்ட சாதனங்களுள் ஒன்றினையேனும் காட்ட இயலாத விண்ணப்பகாரரின் அபேட்சகர்நிலை தற்போதையதாகும். அவ்வித நிலை கமத்தொழிற்பணிப்பாளரின் தற்றுணிபின்படி அழிக்கப்படலாம்.

**10. தகுதிச் சாதனங்கள்.—**

(அ) விண்ணப்பத்தோடு எவ்வித சாதனங்களும் சேர்த்து அனுப்பலாகாது, ஆனால் பத்திரத்திலேயே கேட்கப்பட்டவாறு தேவையான விவரங்களெல்லாம் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த வகைகளிலெல்லாம் நிறைவு பெற்றிராத ஒரு விண்ணப்பம் அதன் தகுதிக்கேற்பச் சீர்தூக்கி ஆராயப்பட்டு நிராகரிக்கப்படினும் படலாம்.

(ஆ) தகைமை பெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து அவர்கள் தங்கள் தகுதியுடைமையை நிறுவுவதற்காகச் சாதனச் சான்று வேண்டப்படும். அத்தகைய பரீட்சார்த்திகள், வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்பட்டால், இச்சாதனங்களைக் காட்டுதல்வேண்டும் அல்லது கமத்தொழிற்பணிப்பாளர் கேட்கும்போது தாமதமின்றி அவற்றைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(இ) பின்வரும் சாதனங்கள் தேவையாகும் :—

(1) பொறுப்புள்ள ஒருவரால் கையொப்பமிடப்பட்டுள்ள ஒருநற்சான்றுப்பத்திரம்.

**குறிப்பு :**

பரீட்சார்த்தி ஓர் அரசாங்க பாடசாலையில் அல்லது உதவி பெறும் பாடசாலையில் மாணவராயிருப்பின் அல்லது அண்மையில் விலகியிருப்பின் அப்பாடசாலை அதிபரிடமிருந்தே நற்சான்றுப் பத்திரம் பெறுதல் வேண்டும். அல்லாவிடின் ஒரு சமாதான நீதவானிடம், வழக்கறிஞரிடம், நியாயதுரந்தரரிடம் இருந்தோ அல்லது நொத்தாரிசிடமிருந்தோ அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர், ஆண்டொன்றுக்கு 2,400 ரூபாயோ அதற்கு மேலோ சம்பளமாகப் பெறும் ஒரு நிலையான அரசாங்க உத்தியோகத்தரிடம் இருந்தோ அல்லது பொதுவாகக் கூறுமிடத்து பிரசித்தி பெற்றவரும் சாதாரணமாக அறியப்பட்டவருமான ஒருவரிடம் இருந்தோ பெற்றுக்கொள்ளலாம். நற்சான்றுப்பத்திரம் அதனை வழங்குபவரின் பெயர், பதவி, விலாசம் முதலியவற்றைத் தெளிவாகக் கொண்டுள்ளதாயிருத்தல் வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் பரீட்சார்த்திகள் நற்சான்றுப்பத்திரங்கள் காட்டுமாறு வேண்டப்படமாட்டார்.

(2) பரீட்சார்த்தியின் பிறப்புப்பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது (பிறப்புப்பதிவு செய்யப்படாத பரீட்சார்த்தியின் பொருட்டு) பதிவாளர் நாயகத்தினால் கொடுக்கப்பட்ட விசேட வயது சாட்சிப்பத்திரம். எந்தவோர் அபேட்சகரும் நேர்தகவு வயதுச் சான்றிதழ் மட்டும் சமர்ப்பிக்குமிடத்து அன்னவரின் சான்றிதழிற் காட்டப்பட்டுள்ள ஆண்டின் யூலை 1 ந் தேதியே அவரின்பிறப்புத் தேதியெனக் கருதப்படும்.

**குறிப்பு :**

(அ) பாடசாலைத் தேவைகளுக்கு அல்லது கல்வித் தேவைகளுக்கு வழக்கப்பட்ட விசேட பிறப்பத்தாட்சிப்பத்திரம் அல்லது பிறப்புப்பதிவினின்றும் எடுக்கப்பட்டு அத்தாட்சிப் படுத்தப்பட்ட பகுதி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஆ) சத்தியக் கடதாசியோ, ஞானஸ்நான அத்தாட்சிப்பத்திரங்களோ பிறப்பத்தாட்சிப் பத்திரங்களுக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(இ) பிறப்பத்தாட்சிப்பத்திரத்திலுள்ள பெயர்/பெயர்கள், பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும்/உபயோகிப்பனவும் இப்பரீட்சையெடுப்பதற்குக் கொடுத்துள்ளதும் /கொடுத்துள்ளனவுமான பெயர்/பெயர்களினின்றும் வேறுபட்டால், பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கு 1951ஆம் ஆண்டின் 17 ம் இல. பிறப்பு இறப்புப் பதிவுத் சட்டத்தின் 27 அல்லது 28ஆம் பிரிவின் நியதிகளின்படி உடனே நடவடிக்கை எடுத்தல்வேண்டும்.

(ஈ) நிரந்தர அரசாங்க உத்தியோகத்தில் இருந்துகொண்டு 18.8.57 இன் 394 ஆம் இல. திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தம் பெயர்களை மாற்றியிருக்கும் பரீட்சார்த்திகள் பிறப்புப்பதிவு இடாப்பிலுள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்கப்படமாட்டார்கள்.

(3) இலங்கைப் பிரசையெனப் பதிவு செய்யப்பட்டதற்குரிய பதிவத் தாட்சிப்பத்திரம் அல்லது (ஏற்புடையவிடத்து) பரம்பரைப் பிரசை யென்னும் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் உத்தியோக பூர்வமான மூலக்கடிதம்.

(4) கல்வித் தகைமைகள் பற்றிய மூலசான்றிதழ்கள் அல்லது அவ்வித சான்றிதழ்கள் இன்னும் பெற்றுக்கொள்ளப்படாவிடத்து, தொடர்பான அரசகரும வேறேதேனும் சாதனம் (உ—ம்:—தனிப்பட்ட அபேட்சகர்களுக்கு வழங்கப்படும் கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சையின் முடிவுத்தாள் அல்லது அபேட்சகரின் பாடசாலை அதிபரின் கடிதம்).

(5) இலங்கையிலுள்ள ஐக்கியராச்சிய சேவைகளில் ஒரு குடிமக்கள் ஊழியராகச் சேவையாற்றியமை பற்றிய சான்றிதழ் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளில் சேவையாற்றியமை பற்றிய சான்றிதழ்.

(6) அடையாளச்சீட்டு (வாய்மொழி பரீட்சை நடந்தால், அப்போதும்)

(ஈ) விண்ணப்பம் செய்யும்போது தேவையான சாதனங்கள் எல்லாவற்றையும் கைவசம் வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். வாய்மொழிப் பரீட்சை நடந்தால், அப்போது தேவையான சாதனங்களைக் காட்ட முடியாமல் இடர்ப்படும் அல்லது கமத்தொழிற்பணிப்பாளர் கேட்கும்போது அவற்றை அனுப்பிவைக்கத் தாமதிக்கும் எப்பரீட்சாத்திகளினதும் பரீட்சைக்கான பதிவு நிராகரிக்கப்படும்.

**11. பணம் மீளளிப்பு**—எச்சந்தர்ப்பத்திலாவது பணம் திருப்பி கொடுக்கப்படமாட்டாது. இப் பரீட்சைக்காகக் கொடுத்த கட்டணங்களை வேறெப்பரீட்சைக்கேனும் மாற்ற முடியாது.

**12. பரீட்சைத்திட்டம்.—**

இப்பரீட்சைக்குரிய பாடங்களும் ஒவ்வொரு பாடத்துக்குமெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே தரப்படுகின்றன. எல்லா விடைத்தாள்களிலும் கூடாத கையெழுத்துக்கும், எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். வாசிக்கமுடியாதவகையில் எழுதும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவரென நீக்கிவிடப்படுவதற்கு ஆளாவர் :

| | | |
|---|---|---|
| (1) பாஷையும் வியாசமும் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) | .. | 1 மணி. .50 புள்ளிகள் |
| (2) இரசாயனவியல் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) | .. | 2 மணி. .100 புள்ளிகள் |
| (3) பௌதிகவியல் அல்லது தாவரவியல் அல்லது விலங்கியல் அல்லது உயிரியல் அல்லது விவசாய விஞ்ஞானம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) | .. | 1 மணி. .50 புள்ளிகள் |
| (4) பொது விவேகம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) | .. | ½ மணி. .50 புள்ளிகள் |

கல்விப்பொதுத்தராதர (சாதாரண) பரீட்சைப் பாடத்திட்டத்துக்கு ஒப்பானதாகவே இப்பரீட்சைக்குரிய கேள்விகள் அமையும்.

13. **நேரசூசி.—**

இப்பரீட்சைக்குரிய நேரசூசி பின்வருமாறு ஆகும். இச்சூசியின் பிறம்பான பிரதி வழங்கப்படமாட்டாதாகையினுல் இதனை விண்ணப்பகாரர் குறித்து வைத்துக்கொள்ளுதல் நலம்.

**பரீட்சைத் தேதி : 1970 மாச்சு 14.**

மு. ப. 9.00—மு. ப. 10.00 பாஷையும் வியாசமும்.

மு. ப. 10.15—மு. ப. 11.15 பௌதிகவியல் அல்லது தாவரவியல் அல்லது விலங்கியல்அல்லது உயிரியல் அல்லது விவசாய விஞ்ஞானம்.

மு. ப. 11.30—நண்பகல 12.00 பொது விவேகம்.

பி. ப. 1.00—பி. ப. 3.00 இரசாயனவியல்.

14. **பொய்யான விவரங்கள் கொடுப்போருக்குரிய அபராதம் :**

இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதியில்லாதவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் போதோ, பரீட்சைக்குப் பின்னரோ எந்நிலையிலாவது அவரைப் பரீட்சார்த்தியென்று அனுமதித்தமை தள்ளுபடி செய்யப்படுவதற்கு ஏதுவாகும். ஒருவர் நியமனம் பெற்று சேவை செய்யும் காலத்தில் எப்போதாவது இப்பரீட்சை எடுப்பதற்குத் தகுதி அற்றவர் என்பது நிரூபிக்கப்பட்டால் அவர் சேவையிலிருந்து உடனே விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

கமத்தொழிற்பணிப்பாளர்.

கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை,
1969 ந் ஆண்டு ஜனவரி மீ 14 ந் வ.

## மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**ஆய்கூட உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை—கமத்தொழிற்றிணைக்களம்**

**சுட்டிலக்கம் :**

1. இறுதிப்பெயர், முதலெழுத்துக்களுடன் :————.
2. முதலெழுத்துக்களினுல் குறிக்கப்பட்ட பெயர்கள் :————
3. முழு அஞ்சல் முகவரி :————.
   (அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் அலுவலக முகவரியைக் கொடுத்தல் வேண்டும்)
4. தகவுத்திறன்—
   (அ) பிறந்த தேதி :————.
   (ஆ) கல்வித் தகைமை :————.
   (இ) இலங்கைப் பிரசையாவென்பதும் அவ்வாருயின் பரம்பரையினுலா பதிவினுலா என்பதும் :————.
   (ஈ) உமக்குப் பொருத்தமான தகவுத்திறன் சார்ந்த பிற விவரங்கள் :————.
5. நீர் எடுக்கவுள்ள பாடங்கள் :

| பாடம் | மொழி |
|---|---|
| 1. பாஷையும் வியாசமும் | ———— |
| 2. இரசாயனவியல் | ———— |
| 3. பொது விவேகம் | ———— |
| 4.———— | ———— |

6. (அ) எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் நான் தந்துள்ள கூற்றுக்கள்யாவும் உண்மையானவையெனவும் நான் ஒட்டும் முத்திரைகள் நிசமானவையெனவும் அவை முன்னர் உபயோகப்படவில்லையெனவும் எனது நேர்மையின் பேரில் நான் உறுதிப்படுத்துகின்றேன்.
   (ஆ) இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களுக்கிணங்கியொழுக நான் உடன்படுகினறேன்.
7. முத்திரைகளுக்கான கூண்டு **(முக்கியம்)**—
   பரீட்சார்த்தி இங்கு 25 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டி அவைமீது தமது கையொப்பத்தையும் தேதியையும் இட்டு அவைகளை அழித்தல் வேண்டும். முத்திரைகளை ஒன்றின்மீதொன்ருக ஒட்டலாகாது.

————,
தேதி :———— பரீட்சார்த்தியின் கையொப்பம்.

8. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் : ————. —
   ........................................ வசிப்பவரும்/
   வேலை செய்பவரும் என்னுல் நன்கு அறியப்பட்டவருமாகிய ......
   ........................ என்பவர் 1970 ஆம் ஆண்டு ..........
   மாதம் ............ஆம் தேதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தையிட்டாரென நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.
   அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம் :————,
   பெயர், பதவிப்பெயர், நிலை :————,
   முகவரி :————,

தற்பொழுது அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பகாரரொருவரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் அவரது திணைக்களத் தலைவரினுல் அல்லது அவ்வாறு செய்தற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரினுல் செய்யப்படுதல் வேண்டும்.

## பரீட்சைத் திணைக்களம் இலங்கை

**பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்**

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகள் மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரசின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(1) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர். அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(2) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(3) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(4) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(5) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(6) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சாதிகாரிகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

**விதிகள்**

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற் பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணது நடந்து கொள்ளவேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்துள் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்திக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானுல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர். செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப் படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால், சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அழகிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும், புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டு வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்படவேண்டும். விடைத் தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான, விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவிசெய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு—**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக் கருதி மேல்வரும் விதிகளை கவனித்தல் வேண்டும் :—

(1) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்த பட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத்தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(2) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும் அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(3) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(4) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப் பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும் உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிடவேண்டும்.

(5) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிரப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டுகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(6) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இருபக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுதவேண்டாம்.

(7) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(8) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள் கோட்டு ரூபங்கள், சிறுபடங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(9) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல்மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(10) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றி உள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(11) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்கவேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(12) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டவேண்டும்.

கமத்தொழிற் பணிப்பாளர்,
கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை.

12–1224—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

## கணக்குப் பரிசோதகர்களைத் தெரிந்தெடுப்பதற்கான விசேட பரீட்சை—1967

28.4.1967 ஆந் திகதிய 14,746 ஆம் இலக்கமுள்ள இலங்கை அரசாங்கச் செய்திமடலின் I ஆம் பிரிவின் II ஆம் பகுதியில், 21.4.1967 ஆந் திகதிய செய்திமடல் அறிவித்தலின்படி வெளியிடப்பட்டிருந்த கணக்குப் பரிசோதகர்களைத் தெரிந்தெடுப்பதற்கான விசேட பரீட்சை இரத்துச் செய்யப்பட்டுள்ளதெனப் பரீட்சார்த்திகள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். காலக்கிரமத்தில் பரீட்சைக் கட்டணங்களைத் திருப்பி அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எஸ். டி. ஏ. வோல்டர்,
கணக்காய்வாளர் தலைமையதிபதிக்காக.

கணக்காய்வு அலுவலகம்,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 17 ந் உ.

12-1167—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886.

---

திறைசேரி இல. 1/23/2/19 (ஜி).

## பொது எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் II ஆந் தரத்திற்குப் பதவியேற்றஞ் செய்வதற்குப் பரீட்சை—1969, நவம்பர்

1969 ஒகத்து மாதம் 29 ஆந் தேதிய அரசாங்கச் செய்திமடலில் வெளியிடப்பட்டுள்ள மேற்கூறிய பரீட்சை சம்பந்தமான 1969 ஒகத்து மாதம் 21 ஆந் தேதிய அறிவித்தலின் 2 ஆம் பந்தியின் சார்பாக, இப் பரீட்சையின் பெறுபேறுகளிலிருந்து நிரப்பப்படவுள்ள வெற்றுப் பதவிகளில் அண்ணளவான எண்ணிக்கை 118 ஆகுமெனப் பரீட்சார்த்திகளின் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

பொதுத்திறைசேரி,
கொழும்பு.
1969 ம் ஆண்டு திசம்பர் மீ 21 ந் உ.

12–1096—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

---

## அளவையியலும் மட்டமாக்கலிலும் விசேஷ செய்முறைப் பரீட்சை

நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான நில அளவையும் மட்டமாக்கலிலும் சம்பந்தமான விசேஷ செய்முறைப் பரீட்சை போதிய அளவு விண்ணப்பப் பத்திரங்களிருந்தால் 1970 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ம் திகதி ஆரம்பமாகும். நில அளவையாளர் நாயகத்தின் எழுத்துப் பரீட்சையில் முன்பு சித்தியெய்தியோர் மாத்திரம் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவராவர்.

2. இப் பரீட்சை கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்படும்.

3. இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு. பிரமாணங்களுக்கமைய விதித்த விண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். இவ் விண்ணப்பப் பத்திரங்களை கொழும்பு 5, கிருல வீதியிலுள்ள நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

4. பரீட்சார்த்திகள் விண்ணப்பம் ஏற்கும் முடிவு தேதிக்கு முன்பு, அதாவது 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ம் திகதிக்கு முன்பதாக கீழ்க்காணும் பரீட்சைக் கட்டணங்களை நில அளவையாளர் நாயகம் அவர்களிடம் செலுத்தல் வேண்டும் :

| | ரூபா |
|---|---|
| நில அளவைப் பரீட்சைக்கு மட்டும் .. | .. 30 00 |
| மட்டமாக்கல் பரீட்சைக்கு மட்டும் .. | .. 30 00 |
| நில அளவையும் மட்டமாக்கலும் பரீட்சைக்கு | .. 50 00 |

5. நில அளவையிலும் மட்டமாக்கலிலுமான எழுத்துப் பரீட்சையின் பாடத் திட்டங்களுக்குள் அமையும் இப் பரீட்சை பற்றிய நேரம், இடம் ஆகியன பரீட்சார்த்திகளுக்கு உரிய காலத்தில் அறிவிக்கப்படும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சகர் குறிக்கும் நேரங்களுள் வெளிக்கள வேலைகள் செய்வதோடு சீரான நிலையிலுள்ள உபகரணங்களையுங் கொண்டுவருதல் வேண்டும். திருப்தியற்ற வேலைகளுக்குச் சீரற்ற உபகரணங்களை ஒரு காரணமாகக் கொள்ள முடியாது. பரீட்சை நேரத்தில் எவருடனுவது தொடர்பு கொள்ளக் காணப்படும் பரீடசார்த்திகளின் தகைமை நீக்கப்படும்.

7. எல்லாப் பரீட்சார்த்திகளும் தங்கள் சொந்த உபகரணங்கள், கம்பங்கள், முனைகள், வரைதற் பலகைகள், வரைதற் பொருட்கள், எழுது கருவிவகை ஆகியனவற்றையும் தொழிலாளர்களையும் கொண்டு வருதல் வேண்டும். இவை சம்பந்தமாக எவ்விதத்திலும் உதவி அளிக்கப்பட மாட்டாது.

8. 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ம் திகதிக்குப் பின்பு கிடைக்கும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக் கொளப்படமாட்டாது.

9. சகல பரீட்சார்த்திகளும் மேற்பார்வையாளர் திருப்திப்படுமாறு தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந் நோக்கத்துக்காக கீழே கொடுக்கப்படும் ஏதாவதொரு சாசனம் அங்கீகரிக்கப்படும்:—

(அ) தபாற் கந்தோர்களின் தலைமை அதிபதியால் வழங்கப்படும் அடையாள அட்டை.

(ஆ) இப் பரீட்சைத் திகதிக்கு முன் மூன்று வருடங்களுக்குட்பட்ட காலத்தில் வழங்கப்பட்டதும் செல்லுபடியாகக்கூடியதுமான ஒரு பிரயாண அனுமதிச் சாசனம் (பாஸ்போட்).

(இ) இப் பரீட்சை நிகழும் திகதிக்கு முன் மூன்று வருடத்திற்குள் ஓர் அரசாங்கப்பகுதியின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும், அதற்குரியவரது புகைப்படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாசனம்.

10. மேற் குறிக்கப்பட்ட எந்தவொரு சாசனமூலமாவது தமது அடையாளத்தை நிரூபிக்கத் தவறும் எந்தப் பரீட்சார்த்தியும் பரீட்சிக்கப்படுவதற்குத் தகுதியற்றவராவர்.

11. இது சம்பந்தமான சகல தொடர்புகளும் நில அளவையாளர் நாயகத்துக்கே விலாசமிடப்பட வேண்டுமேயன்றி எனக்குத் தனிப்பட்ட முறையிலல்ல.

12. (அ) எக்காரணங்கொண்டும் கட்டுப்பணம் திருப்பிக்கொடுபட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தகுந்த காரணத்தைக்காட்டி பரீட்சையிலிருந்து விலகுவதான அறிவித்தலை 9.2.1970 ல் அல்லது அதற்குமுன்னர் இக்காரியாலயத்துக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பினுல், அடுத்து நடைபெறவிருக்கும் பரீட்சைக்குக் கட்டுப்பணமின்றித் தோற்ற அனுமதியளிக்கப்படுவர்.

(இ) பரீட்சார்த்திகள் தகுந்த காரணத்தைக்காட்டியோ, அல்லது சுகவீன காரணத்தாலோ (வைத்திய அத்தாட்சிப்பத்திரத்தால் உறுதிப் படுத்தப்படல் வேண்டும்) பரீட்சையிலிருந்து விலகுவதான அறிவித்தலை 9.2.1970 ற்குப் பின்பும் பரீட்சை ஆரம்பத்திகதிக்கு முன்பும் இக் காரியாலயத்திற்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பினுல் கட்டுப்பணத்தின் அரைப்பங்கைக் கட்டி அடுத்து நடைபெறவிருக்கும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

(ஈ) பரீட்சார்த்தியின் கட்டுப்பணம் சம்பந்தமாக (ஆ), (இ) வில் குறிப்பிட்டுள்ள சலுகைகள் தவறினுல் அல்லது பரீட்சைக்குத் தோற்ற முடியாத காரணத்தைப்பற்றிய அறிவித்தலைப் பரீட்சை ஆரம்பத்திற்கு முன் அறியத்தராமலிருந்தால் அவர்களின் கட்டுப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

சி. ரி. குணவர்த்தன,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கிருல வீதி,
த. பெ. எண் 506,
கொழும்பு 5,
1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம்.

12–1136—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14.886

## பரீட்சைப் பகுதி, இலங்கை

**மருதானை இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில் நுட்ப நிலையம், இரத்மலானை, காலி, கண்டி, யாழ்ப்பா,ணம் குருநாகல், அனுராதபுரம், கேகாலை, வதுளை கனிட்ட தொழில் நுட்ப நிலையங்கள் ஆகியவற்றிலும் கட்டுப்பெத்த, இலங்கை தொழில் நுட்பவியல் கல்லூரியில் நுண்தொழிலாளர் மட்டத்தில் நடைபெறும் பயிற்சி நெறிகளுக்கும் 1970 ம் ஆண்டு அனுமதிப்பதற்கான பரீட்சைப் பிரமாணங்கள்**

மகா வித்தியாதிபதியின் இசைவுடனேயே இப்பிரமாணங்கள் வகுக்கப்பட்டு மகா வித்தியாதிபதியின் சார்பில் இப்பரீட்சை பரீட்சாதிகாரியால் நடாத்தப்படுகிறது.

(அ) நடைபெறும் பயிற்சி நெறிகளின் பூரண அட்டவணை, பயிற்சி நெறிகளில் இடம்பெறும் பாடவிதானங்கள் பற்றிய விபரங்கள், புகுமுகப் பரீட்சையிலிருந்தும் பயிற்சி நெறிகளின் சில பகுதிகளிலிருந்தும் அளிக்கப்படும் விலக்குகள் ஆகியவை பற்றிய விபரங்களை இலங்கைத் தொழில் நுட்பவியல் கல்லூரியாலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிலையங்களில் அனுமதிப்பது தொடர்பில் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியாலும் வழங்கப்படும் கைநூல்களில் பார்க்கவும் ; ஏனைய நிலையங்களைப் பொறுத்தவரையில் உரிய அதிபர்களுடன் தொடர்பு கொள்ளவும். யாதேனும் ஒரு பயிற்சி நெறிக்குப் போதிய தொகை அபேட்சகர்கள் விண்ணப்பிக்காத விடத்து அப்பயிற்சி நெறி இரத்துச் செய்யப்படக்கூடும்.

(ஆ) அனுமதிக்கான, தகவுத்திறன் நிபந்தனைகள் பயிற்சி நெறிகளைப் பொறுத்தவரையில் வேறுபடும்.

(இ) தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு பயிற்சி நெறிக்குமான தகவுத்திறன், நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யுமிடத்து பரீட்சார்த்திகள் ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சி நெறிகளுக்கு அனுமதி கோரலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சி நெறிகளுக்கு அனுமதிக்கப்படுதற்கு தகைமை பெறுமிடத்து, குறித்த ஒரு பயிற்சி நெறியைப் பின்பற்றுமாறு விண்ணப்பதாரி ஒருவரை வேண்டும் உரிமையைத் தனதாகக் கொண்டுள்ள மகா வித்தியாதிபதியின் அங்கீகாரத்துக்கமைய, பரீட்சார்த்தி தனது தெரிவைச் செய்யலாம்.

(ஈ) மாலை நேரப் பயிற்சி நெறி ஒன்றுக்கு அனுமதிக்கப்படுதற்குக் குறித்த துறையில் வேலைக்கு அமர்ந்துள்ளவர்கள் மாத்திரமே சேர்த்துக்கப்படுவார்கள்.

(உ) யாதேனும் நிலையத்தின் ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞானப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் வேறு ஒரு நிலையத்தின் மாலை நேர எந்திரவியல் பயிற்சி நெறிக்கு அனுமதி கோரின் உரிய பயிற்சி நெறிக்குப் பொருத்தமான புகுமுகப் பரீட்சையில் அவர் சித்தியடைய வேண்டும்.

2. **பரீட்சை நிலையங்கள்.**—(i) பரீட்சை பின்வரும் நிலையங்களில் நடாத்தப்படும் :
கொழும்பு, மட்டக்களப்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, காலி, யாழ்ப்பாணம், குருநாகல், வதுளை, அனுராதபுரம்.

(ii) பரீட்சார்த்தி ஒரு பரீட்சை நிலையத்தை மாத்திரமே தெரிவு செய்தல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்தி ஒருவர் தெரிவு செய்யும் பரீட்சை நிலையத்தில் மாற்றமெதுவும் அனுமதிக்கப்படமாட்டாது.

3. **புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றுதற்கான தகவுத்திறன்.**—அபேட்சகர் ஒருவர்—

(i) நற்குணமுடையவராகவும்,

(ii) இலங்கைப் பிரசையாகவும்,

(iii) குறித்த பயிற்சி நெறிக்கு அனுமதிப்பதற்கு வேண்டிய கல்வித் தகைமைகளைப் பெற்றவராகவும் இருக்க வேண்டும் (1969 ம் ஆண்டு டிசெம்பர் மாத க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சைக்குத் தோற்றி, பெறுபேறுகளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்). ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் வேண்டிய கல்வித் தகைமைகள் இப்பிரமாணங்களில் முடிவில் காணப்படும். அட்டவணையில் கொடுபட்டுள்ளன.

**குறிப்பு.**—(i) சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் நடைபெறும் பயிற்சி நெறிகளைப் பொறுத்தவரையில், அனுமதிக்கான தகவுத் திறன் நிபந்தனைகள் பயிற்சி நெறிப் போதனா மொழிக்கமைய வேறுபடக்கூடும்.

(ii) சி. பா. த. (ஆங்கில) ப. பெற்றிருக்கும் அல்லது க. பொ. த. (சாதாரண தர) ப. பரீட்சையில் " அ " அல்லது " ஆ " பாடத்திட்டத்தின் கீழ் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருக்கும் பரீட்சார்த்தி ஒருவர் ஆங்கில மொழியில் சித்தி எய்தியதாகக் கருதப்படுவர்.

(iii) கணிதம் தேவைப்படுமிடத்து, க. பொ. த. (சாதாரண தர)ப. பரீட்சையில் ஆரம்ப கணிதத்தில் அல்லது தூய கணிதத்தில் அல்லது உயர்தர கணிதத்தில் சித்தி பெற்றிருப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) குறித்த ஒரு பாடத்தில் க. பொ. த. (உயர்தர)ப. பரீட்சையில் அபேட்சகர் ஒருவர் சித்தி அடைந்திருப்பின் க. பொ. த. (சாதாரண தர) ப. பரீட்சையில் அப்பாடத்திலிருந்து அவருக்கு விலக்கு அளிக்கப்படும்.

4. **வயதுக் கட்டுப்பாடு.**—ஒவ்வொரு பரீட்சை நெறிக்குமுரிய புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகவுத்திறனில் கொடுக்கப்பட்டுள்ளது

5. **எழுத்து மூலப் பரீட்சைத் திகதி.**—இப்பரீட்சை 1970 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 25 ந் திகதியன்று ஆரம்பமாகும்.

6. **நேர்முகப் பரீட்சை.**—எழுத்து மூலப் பரீட்சையில் போதிய தரத்தை அடைந்துள்ள ஒவ்வொருவரும் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்குச் சமூகமளிக்கும்படி வேண்டப்படக்கூடும் ; குறித்த பரீட்சைக்கான திகதி, நேரம், இடம் ஆகிய விபரங்கள் உரிய நிலைய அதிபரால் அறிவிக்கப்படும்.

7. **மொழி மூலம்.**—எழுத்து மூலப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கிடைக்கும். எனினும் பொது எந்திரவியல் அறிவிலும் எண்கணிதம் "இ" யிலும் வினாத்தாள்கள் சிங்கள, தமிழ் மொழிகளில் மாத்திரமே கிடைக்கும்.

8. **பரீட்சார்த்தி சேர விரும்பும் தொழில் நுட்ப நிலையம்.**—பரீட்சார்த்திகள் யாதேனும் இரு தொழில் நுட்ப நிலையங்களுக்கான அனுமதிக்குப் போட்டியிடலாம். புகுமுகப் பரீட்சைக்கான படிவத்தில் காணப்படும் உரிய கூட்டில் பரீட்சார்த்திகள், தமது விருப்ப ஒழுங்கின் பிரகாரம், இரு தொழில் நுட்ப நிலையங்களைக் குறிப்பிட வேண்டும்.

9. **நேர அட்டவணை :**

**முதல் நாள்**

மு. ப. 9.00—மு. ப. 11.00—கேத்திர கணித முறை வரைதலும் பொறிமுறை வரைதலும்
மு. ப. 11.15—மு. ப. 11.45—பொது விவேகம்
பி. ப. 1.00—பி. ப. 3.00—தூய கணிதம்
பி. ப. 3.15—பி. ப. 4.15—கட்டுரை (சிங்களம்/தமிழ்).

**இரண்டாம் நாள்**

மு. ப. 8.30—மு. ப. 9.30—கட்டுரை (ஆங்கிலம்)
மு. ப. 9.45—மு. ப. 11.45- -எண்கணிதம் "அ"
பி. ப. 12.30—பி. ப. 2.30—பௌதிகவியல்
பி. ப. 2.45—பி. ப. 4.45—எண்கணிதம் "ஆ"

**மூன்றாம் நாள்**

மு. ப. 8.30—மு. ப. 10.30—ஆரம்ப கணிதம்
மு. ப. 10.45—பி. ப. 12.45—பிரயோக கணிதம்
பி. ப. 1.45—பி. ப. 3.45—எண்கணிதம் "இ"
பி. ப. 4.00—பி. ப. 4.45—பொது எந்திரவியல் அறிவு.

10. **புகுமுகப் பரீட்சைக்கான பாடத்திட்டங்கள்.**—(அ) தூய கணிதம்—அட்சர கணிதம், கேத்திர கணிதம், திரிகோண கணிதம் ஆகியவற்றில் க. பொ. த. (சாதாரண தர) ப. பரீட்சைக்கு உள்ளவாறு எண்கணிதத்தில் வினுக்கள் கொடுபடமாட்டா.

(ஆ) ஆரம்ப கணிதம்—அட்சர கணிதம், கேத்திர கணிதம், திரிகோண கணிதம் ஆகியவற்றில் க. பொ. த. (சாதாரண தர)ப. பரீட்சைக்குள்ளவாறு. எனினும், வினுக்கள் ஆரம்ப முறையானவையாகவே அமையும். சிக்கலான கணக்குகளின் பிரயோகத்துக்கும் அவற்றின் கோட்பாட்டு முறைக்குமன்றி யாந்திரிக வேலைக்கும் நிதானித்து அறியக்கூடிய வேலைக்கும் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படும். எண்கணிதத்தில் வினுக்கள் ஒன்றும் கொடுபடமாட்டா.

(இ) எண்கணிதம் " அ "—பௌதிகம், பிரயோக கணிதம், கேத்திர கணிதமுறை வரைதலும் பொறிமுறை வரைதலும்—க. பொ. த. (சாதாரண தர)ப. பரீட்சைக்கு உள்ளவாறு.

(ஈ) எண்கணிதம் "ஆ"—க. பொ. த. (சாதாரண தர) ப. பரீட்சைக்கு வர்த்தக எண் கணிதத்தில் உள்ளவாறு.

(உ) எண்கணிதம் "இ"—நான்கு விதிகள், ஆங்கில முறை, மீற்றர் முறை அளவுகள், நீள் சதுரம், சதுரம், நேர்கோட்டு வடிவங்களும் வட்டங்களும் பெட்டிகளினதும் உருளைகளினதும் கோளங்களினதும் கன அளவுகள்.

(ஊ) கட்டுரை—கொடுபடும் பல விடயங்களுள் ஒன்றைப் பரீட்சார்த்திகள் தெரிவு செய்து அது பற்றிச் கட்டுரை எழுத வேண்டும். இவ்விடயங்கள் வியாபார முயற்சிகள், வர்த்தகம், கைத்தொழில், விஞ்ஞானம், உலக சம்பவங்களும் பிரச்சனைகளும், ஸ்தல சம்பவங்களும் பிரச்சனைகளும் ஆதியன போன்ற விவகாரங்களுடன் சம்பந்தப்பட்டனவாக அமையும். சரியான, தெளிவான சொற்களின் உபயோகத்துக்கும் எண்ணங்களை வாத முறையில் ஒழுங்குபடுத்துதற்கும் விசேட அம்சம் கொடுபடும்.

(எ) பொது எந்திரவியல் அறிவு—வேலைக்கள பொதுக் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவை பற்றி பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிக்கும் முறையான வினுக்கள் கொடுபடும்.

11. **கட்டணம்.**—பரீட்சைக்கான கட்டணம் பின்வருமாறு :—

(i) ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் ரூபா 5.00; மேலதிக ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் ரூபா 2.50.

(ii) கட்டணம், படிவத்தில் ஒட்டப்பட்டு பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும் இடப்பட்டு அழிக்கப்படும், இறைவரி முத்திரைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும். இங்ஙனம் அழிக்கப்படாது அனுப்பப்படும் முத்திரைகளுக்கு இப்பகுதி பொறுப்பேற்காது.

12. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**—(i) பிரமாணங்களுக்கு அமையவும் உரிய கட்டணத்துடனும் விண்ணப்பப் படிவங்களைத் தயாரிக்கும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(ii) பரீட்சைக்கு அனுமதிக்கப்படுதல் தகவுத்திறன் ஏற்றுக்கொள்ளப்படுதலாக அமையாது, பரீட்சைக்குத் தகவுத்திறன் அற்றவராக அல்லது வேண்டிய தகவலைக் கொடுக்காதவராக அல்லது பொய்யான தகவலைக் கொடுத்தவராகக் காணப்படும் அபேட்சகர் ஒருவர் பரீட்சைக் காலத்திலேனும் பரீட்சைக்குப் பின்னரேனும் பயிற்சி நெறிக்காலத்திலேனும் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த பின்னரேனும் தகுதியற்றவராக்கப்படுவார்.

13. **விண்ணப்பம்.**—பரீட்சைப் பகுதியினுல் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரங்களில் மட்டுமே பரீட்சைக்கு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும். தனது முகவரி எழுதப்பட்டதும், " எஸ். ஜீ. 94" என இடது பக்க மூலையில் எழுதப்பட்டதும், முத்திரை ஒட்டப்படாததுமான நீண்ட தபாலுறையை அனுப்பி வைக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் ஜனவரி மாதம் 5 ம் திகதியிலிருந்து 15 ம் திகதி வரையும் விண்ணப்பப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப் பத்திரங்களை நேரில் பெற விரும்புவோர் தொழில் நுட்ப நிலையங்களிலிருந்து ஜனவரி மாதம் 18 ம் திகதிமுதல் 24 ம் திகதி வரைக்கும், பரீட்சைப் பகுதியிலிருந்து ஜனவரி மாதம் 18 ம் திகதி முதல் 24 ம் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) பிரவேசப் படிவம் பூரணமாகவும் செம்மையாகவும் பரீட்சார்த்தியால் நிரப்பப்பட வேண்டும். யாதேனும் ஒரு விபரம் பூரணமற்றதாயிருப்பின் அங்கு கொடுத்துள்ள விபரங்களுக்கமைய அப்படிவம் பரீட்சைக்கு முன்னர் நிராகரிக்கப்படவேனும் பரீட்சையின் பின்னர் அவர் தகுதியற்றவராக்கப்படவேனும் கூடும். பின்வரும் விடயங்களுக்கு பரீட்சார்த்திகளின் கவனம் கோரப்படுகிறது:

(அ) வேலையில் அமர்ந்துள்ள பரீட்சார்த்திகள் தங்கள் பிரவேசப் பத்திரங்கள் அவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளவர்கள் மூலமேனும் தமது ஸ்தல பகுதித் தலைவர்கள் மூலமேனும் அனுப்பவேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தியின் கையொப்பம் அங்கீகரிக்கப்பட்ட ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும். வேலையில் அமர்ந்துள்ளவர்களின் விண்ணப்பங்களில் கொடுபடும் கையொப்பங்கள் அவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளவர்களால் அல்லது ஸ்தல பகுதித்தலைவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(iii) பூரணப்படுத்தப்பட்ட பிரவேசப் பத்திரங்கள் பதிவு அஞ்சல் மூலம் **1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடியதாக பரீட்சாதிகாரிக்கு (கொழும்பு 2) அனுப்பப்பட வேண்டும்.

(iv) பிரவேசப் பத்திரங்கள் கிடைக்கப்படுவது பற்றி பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

(v) சாதனங்கள் ஒன்றும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைக்கப்படலாகாது.

14. **பிரவேசக் கோரிக்கையை நிராகரித்தல்.**—(i) (அ) பூரணமற்ற அல்லது குறைபாடான அல்லது பிரமாணங்களுக்கு அமைய தயாரிக்கப்படாத (ஆ) உரிய கட்டணத்தை கொண்டிராத (இ) பிரவேசப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் பிரவேசப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும் ; சம்பந்தப்பட்ட அபேட்சகர்கள் அதுபற்றி அறிவிக்கப்படுவார்கள். அபேட்சகர் ஒருவர் ஏற்கனவே பரீட்சைக்குத் தோற்றி இருப்பின் அவர் தகுதியற்றவராக்கப்படுவர்.

(ii) ஒரு பிரவேசப் பத்திரம் நிராகரிக்கப்படின் அல்லது அபேட்சகர் ஒருவர் தகுதியற்றவராக்கப்படின் அவர் தனது கட்டணத்தை இழப்பார்.

15. **பரீட்சையிலிருந்து விலகுதல் அல்லது பரீட்சைக்குச் சமுகமளியாதிருத்தலும் கட்டணத்தைத் திருப்பிக் கொடுத்தலும்.**—(i) பரீட்சையிலிருந்து விலகுவதான அறிவித்தல் பிரவேசப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படின், செலுத்தப்பட்ட கட்டணத்தின் 90% திருப்பிக் கொடுபடும்.

(ii) பரீட்சைக்குச் சமுகமளியாதிருத்தல் (எக்காரணத்தையிட்டும்) உட்பட சகல சந்தர்ப்பங்களிலும் **கட்டணமேனும் கட்டணத்தின் எப்பகுதியேனும்** திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

(iii) எனினும் ஒருவர் ஒரு வினுப்பத்திரத்துக்கேனும் தோற்றுதிருப்பின், மரணம் அல்லது கடும் அல்லது நீண்டகால சுகவீனம் காரணமாக (கயரோகம், பாரிசவாதம், உளக்கோளாறு, நரம்புத் தளர்ச்சி) அவருக்கு கட்டணத்தில் 90% திருப்பிக் கொடுபடும். அத்தகைய பணத்தை மீளப் பெறுதற்கான விண்ணப்பம் பரீட்சைக் கடைசித் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் செய்யப்படவேண்டும்.

16. **பிரவேசச் சீட்டுகள்.**—(i) பரீட்சை ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்துக்கு முன் அவற்றை வழங்குதல் சம்பந்தமாக புதினத்தாள்கள் மூலமும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மூலமும் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலைக் கவனித்து அங்கு கொடுக்கப்படும் அறிவுறுத்துரைகள் மூலம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(ii) பிரவேசச் சீட்டினைப் பரீட்சார்த்தி பெற்றிராவிடின் அவர் தந்திமூலம் கொழும்பு, கொம்பனி வீதி, மலாய் வீதியிலுள்ள பரீட்சைப் பகுதியுடன் தொடர்பு கொள்ள வேண்டும். (தந்தி விலாசம் : " பரீட்சை ", கொழும்பு) பின்வரும் விபரங்களை அபேட்சகர் கொடுக்க வேண்டும். நேரில் சமுகமளிக்கும் பரீட்சார்த்திகள், கொழும்பு 13, கொட்டாஞ்சேனை, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை (முன்னர் ஆட்டுப்பட்டித் தெரு) 130 ம் இலக்கத்திலுள்ள இத்திணைக்களத்தின் பிரவேசக் கிளையில் விசாரணை செய்யும்வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

(அ) பரீட்சைப் பெயர் : ————.
(ஆ) அபேட்சகரின் முழுப்பெயர் : ————.
(இ) அபேட்சகரின் தபால் விலாசம் : ————.
(ஈ) அபேட்சகர் விண்ணப்பித்த பரீட்சை நிலையம் : ————.
**(உ) பிரவேசப் பத்திரம் அனுப்பப்பட்ட தபாற் கந்தோர், பதிவிலக்கம், அனுப்பிய திகதி : ————.**

17. **அடையாளப் பத்திரங்கள்.**—எல்லாப் பரீட்சார்த்திகளும் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாட வேளையிலும் தாம் உண்மையான பரீட்சார்த்திகள் என்பதை மேற்பார்வையாளருக்கு நிரூபித்தல் வேண்டும். பின்வரும் உறுதிப் பத்திரங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தலைமைத் தபால் அதிபதியிடமிருந்து பெற்ற அடையாளச் சீட்டு ;

(ஆ) பரீட்சை ஆரம்பமாவதற்கு 3 வருடங்களுக்கு முன்னுள்ள காலத்துக்குள் பெற்ற பயனுள்ள துறைமுகஞ்செல் அனுமதிப் பத்திரம் ;

(இ) பரீட்சை ஆரம்பமாவதற்கு 3 வருடங்களுக்கு முன்னுள்ள காலத்துக்குள் ஓர் அரசாங்க பகுதி அதிகாரத்தின் கீழ் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரத்தின் கீழ் அல்லது சட்ட முறையான ஒரு நிறுவனத்தின் அதிகாரத்தின் கீழ் வழங்கப் பட்டதும் பரீட்சார்த்தியின் நிழற்படத்தைக் கொண்டதுமான யாதேனும் சான்றுப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது தராதரப் பத்திரம் ;

(ஈ) பாஸ்போட் அளவினதான நிழற்படம். இதன் மறுபுறத்தில், கையொப்பப் பத்திரத்தில் உறுதி கூறத் தகுதிவாய்ந்த ஒருவரால் பின்வருமாறு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

பின்புறத்திலுள்ள படமும் கீழேயுள்ள கையொப்பமும்.............................................................................
(பரீட்சார்த்தியின் முழுப் பெயர்)

பரீட்சார்த்தியுடையது தான் என்பதை அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..............................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

..............................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் : ————.

அந்தஸ்து : ————.

திகதி : ————.

பரீட்சை மண்டபத்திலுள்ள மேற்பார்வையாளரால் இந்நிழற் படம் வைத்துக்கொள்ளப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள யாதேனும் சாதனங்களை சமர்ப்பிக்கத் தவறும் ஒரு பரீட்சார்த்தி தற்காலிகமாக பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவரெனினும் பின்னர் அவருடைய தகுதி பரீட்சாதிகாரியின் தற்றுணிபுக்கேற்ப நிராகரிக்கப்படவும் கூடும்.

18. **சாதனங்கள்.**—(i) பின்வருவனவற்றுள் சிலவேனும் எல்லாமேனும் வேண்டப்படக்கூடும் :—

(அ) பிரபல்யம் வாய்ந்த இருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நற்சாட்சிப் பத்திரங்கள். இவை சமீபகாலத்தில் பெற்றுக்கொள்ளப் பட்டனவாகவும் அபேட்சகரை குறைந்தபட்சம் ஐந்து வருடங்களுக்கு மேலாக நன்ருய் அறிந்தவர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப் பட்டனவாக இருக்க வேண்டும். பாடசாலைத் தலைவர்களிடமேனும் அபேட்சகர் வதியும் பட்டணத்தில் அல்லது கிராமத்தில் உள்ள உத்தியோகத்தர்களிடமேனும் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவை சாலச் சிறந்தனவாகும்.

(ஆ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் அல்லது வயதை அத்தாட்சிப் படுத்தும் விசேட பத்திரம் ;

(இ) இலங்கைப் பிரசையாக பதிவு செய்துள்ள அத்தாட்சிப் பத்திரம் அல்லது வம்சாவழியில் பிரசாவுரிமையை ஏற்றுக்கொள்வதான உத்தியோகபூர்வமான மூலக் கடிதம் (பொருத்தமான இடத்தில்) ;

(ஈ) சி. பா. த. அல்லது க. பொ. த. பத்திரம் (இவை வழங்கப்படாதவிடத்து தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை அல்லது பாடசாலைப் பரீட்சார்த்தியாயின் பாடசாலைத் தலைவரால் வழங்கப்படும் பெறுபேறு பற்றிய கூற்று) இக்கூற்று பரீட்சார்த்தியின் பரீட்சை நடைபெற்ற மாதம், வருடம், சுட்டிலக்கம், பாடங்கள், தரங்கள் ஆகிய முழு விபரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் ;

(உ) க. பொ. த. பத்திரம் அல்லது 8 ம் வகுப்புச் சித்தி, தேவைப்படுமிடத்து பாடசாலையால் அல்லது வித்தியா பகுதியால் வழங்கப்பட்ட முறையான, உத்தியோக பூர்வமான தராதரப்பத்திரம் அல்லது பாடசாலைத் தலைவரால், பாடசாலையின் பெயர், பரீட்சார்த்தி பாடசாலையில் படித்த காலம் ஆகிய விபரங்களைக் கொண்ட ஒரு கூற்று ;

(ஊ) யாதேனும் ஒரு பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படுதற்கு வேண்டிய கல்வித் தகைமைகளை நிரூபிக்கும் வேறு யாதேனும் அத்தாட்சிப் பத்திரம் ;

(எ) வேலைக்கமர்த்தியுள்ளவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் அத்தாட்சிப் பத்திரம், வேண்டியவிடத்து.

(ii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாதனங்களையேனும் அவற்றின் பிரதிகளையேனும் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பலாகாது. பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் நேரத்து நேர்முகப் பரீட்சைச் சபையினருக்கு இவற்றைச் சமர்ப்பித்தற்கு ஆயத்தமாய் வைத்திருக்க வேண்டும். தமது தகவுத் திறனை நேர்முகப் பரீட்சையின்போது வேண்டியனவும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியனவுமான சாதனங்களை சமர்ப்பித்து நிரூபிக்க முடியாதவர்கள் தகுதியற்றவராக்கப்படுவார்கள்.

(iii) அறிவுறுத்துரைகளை அலட்சியம் செய்து சாதனங்களை பிரவேசப்பத்திரத்துடன் அனுப்பும் பரீட்சார்த்திகளின் சாதனங்கள் காணமற் போகுமிடத்து அவற்றிற்கான பொறுப்பை இப்பகுதி ஏற்பதற்கில்லை.

(iv) பரீட்சார்த்தி அனுப்பும் சாதனங்களின் உறுதிக்கு அவரே முழுப் பொறுப்புடையவராவர். மாற்றப்பட்ட அல்லது கள்ள ஒப்பமிட்ட அல்லது உண்மையற்ற சாதனங்களை சமர்ப்பிக்கும் பரீட்சார்த்திகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

19. இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் பற்றியும் பரீட்சாதிகாரி, மகா வித்தியாதிபதியுடன் கலந்தாலோசித்து தற்று ணிப்புக்கேற்ப நடவடிக்கை எடுப்பார்.

கே. ரி. டபிள்யூ. சுமனசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு டிசெம்பர் 14 ஆந் திகதி.

## எந்திரவியல் பயிற்சி நெறிகள்

| பயிற்சி நெறி எண் | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறியின் தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்கவேண்டிய பாடங்கள் | பயிற்சி நெறி நடைபெறும் தாபனம் (போதனுமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| 1. | படம்வரை தொழில் பயில்வோர்.. ஆரம்ப | பகல் முழுநேர—ஒரு வருடம் .. | க. பொ. த. (சா. த.) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்குமேற் படாது தோற்றி ஆறு பாடங்களில் சித்தி. குறித்த ஆறு பாடங்களாவன :—(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி (ஆ) கணிதம் (இ) நான்கு ஏனைய பாடங்கள்<br>அல்லது<br>கணிதத்துடன் சி பா. த. பத்திரம் (கணிதத்தில் சித்தி வேறொரு தடவை நடைபெற்ற க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் பெற்றிருக்கப்படலாம்)<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொதுவிவேகம்<br>(2) தூயகணிதம்<br>(3) பின்வரும் பாடங்களில் யாதேனும் ஒன்று—பிரயோக கணிதம், பௌதிகம், கேத்திர கணித வடிவமுறை, பொறிமுறை வரைதல் .. | இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, கட்டுப்பெத்த (ஆங்கிலம் மூலம்), கனிட்ட தொழில் நுட்ப நிலையம், யாழ்ப்பாணம் (தமிழ் மூலம்), கனிட்ட தொழில்நுட்ப நிலையம், கண்டி (சிங்களம்) |
| 2. | நில அளவையாளரும் மட்டம் பார்ப்.. போரும் | பகல் முழுநேர— ஒரு வருடம் .. | தூய கணிதத்தில் திறமைச் சித்தியுடனும் (அ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் (ஆ) பௌதிகம் (இ) ஏனைய மூன்று பாடங்கள் ஆகியவற்றில் சாதாரண சித்தியுடனும் க. பொ. த. (சா. த.)ப. பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி (இவை இரு தடவைகளுக்கு மேற்படாது பெறப்பட்டிருக்கலாம்)<br>அல்லது<br>தூய கணிதத்தில் திறமைச் சித்தியுடனும் பௌதிகத்தில் சாதாரண சித்தியுடனும் சி. பா. த. ப. பரீட்சையில் சித்தி (தூய கணிதத்தில் திறமைச் சித்தியும் பௌதிகத்தில் சாதாரண சித்தியும் வேறொரு தடவை க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் பெற்றிருக்கப்படலாம்)<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்கவேண்டும். | (1) பொது விவேகம்<br>(2) தூய கணிதம் .. | இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரி, கட்டுபெத்த, காலி, யாழ்ப்பாணம், கண்டி கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் (ஆங்கிலம் மூலம்), ஹாடி சிரேட்ட தொழில் நுட்ப நிலையம், அம்பாறை (ஆண்களுக்கு மாத்திரம்—வதிவிட—ஆங்கிலம் மூலம்) வதுளை கனிட்ட, தொழில் நுட்ப நிலையம் (சிங்களம் மூலம்) |
| 3. | நில அளவையாளரும் மட்டம் பார்ப்.. போரும் | மாலை நேரம்—மூன்று வருடங்கள் .. | நில அளவையாளருக்கும் மட்டம் பார்ப்போருக்குமான பகல் முழுநேர பயிற்சி நெறிக்கு அமைவது போல அல்லது ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞான பயிற்சி நெறியைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும். | (1) பொது விவேகம்<br>(2) தூயகணிதம் .. | இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரி, கட்டுபெத்த, காலி, யாழ்ப்பாணம், கண்டி, கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் (ஆங்கில மொழி மூலம்), வதுளை கனிட்ட தொழில்நுட்ப நிலையம் (ஆங்கிலம்/சிங்களம் மூலம்) |
| 4. | எந்திரவியல் தொழில் பயில்வோர் .. | பகல், பகுதிநேர—இரண்டு வருடங்கள் .. | இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. குறித்த 6 பாடங்களாவன :—(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி (ஆ) கணிதம் (இ) பௌதிகம் (ஈ) வேறு மூன்று பாடங்கள்<br>அல்லது<br>கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களுடன் சி. பா. த. ப. பரீட்சையில் சித்தி. குறித்த இரு பாடங்களிலும் சித்தி வேறொரு தடவை க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் பெற்றிருக்கப்படலாம்.<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்க வேண்டும் | (1) பொது விவேகம்<br>(2) தூயகணிதம்<br>(3) பிரயோக கணிதம்<br>(4) பௌதிகம் .. | இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி, கட்டுபெத்த (ஆங்கில மொழிமூலம்) |

| பயிற்சி நெறி எண் | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறியின் தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்கவேண்டிய பாடங்கள் | பயிற்சி நெறி நடைபெறும் தாபனம் (போதனுமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| 5. | எந்திரவியல், மாலைநேர (பொறி முறை/நகரசபை/மின்சார அமைப்பு) | மாலைநேர—மூன்று வருடங்கள் .. | எந்திரவியல் தொழில் பயில்வோருக்கு அமைவது போல<br>அல்லது<br>எந்திரவியல் விஞ்ஞானத்தில் ஆரம்பப் பயிற்சி நெறியைப்பூர்த்தி செய்திருக்கவேண்டும்<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்கவேண்டும் | (1) பொது விவேகம் ..<br>(2) தூயகணிதம்<br>(3) பிரயோக கணிதம்<br>(4) பௌதிகம் | .. இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி, கட்டுபெத்த, யாழ்ப்பாணம், கண்டி, இரத்மலானை, குருநாகல் கனிட்ட தொழில் நுட்ப நிலையங்கள் (ஆங்கில மொழிமூலம்) |
| 6. | ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞானம் .. | மாலை நேரம்—ஒரு வருடம் .. | 8 ஆந் தரம் அல்லது 8 ஆம் வகுப்பு அல்லது கனிட்ட பாடசாலைத் தராதரப்பத்திரம்<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும் | (1) பொது விவேகம் ..<br>(2) ஆரம்ப கணிதம் | .. இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரி, கட்டுபெத்த, காலி, யாழ்ப்பாணம், கண்டி கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் (ஆங்கிலம்) அனுராதபுரம், கேகாலை கனிட்ட தொழில் நுட்ப நிலையங்கள் (சிங்களம்) வதுளை, குருணகல், இரத்மலானை (ஆங்கிலம்/சிங்களம்) |
| 7. | கட்டட அமைப்பு .. | மாலை நேரம்—மூன்று வருடங்கள் .. | படம்வரை தொழில் பயில்வோர் ஆரம்ப பயிற்சி நெறிக்கு அமைவது போல<br>அல்லது<br>ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞான பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதிருக்கவேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) தூயகணிதம் | .. இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரி, கட்டுபெத்த யாழ்ப்பாணம், கண்டி, கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் (ஆங்கிலம்) வதுளை, இரத்மலானை (ஆங்கிலம்/சிங்களம்), குருணகல் கனிட்டதொழில் நுட்ப நிலையம் (சிங்களமும் ஆங்கிலமும்) |
| 8. | கட்டட அமைப்பு .. | பகல், பகுதிநேர—மூன்று வருடங்கள் .. | படம்வரை தொழில் பயில்வோர் ஆரம்ப பயிற்சி நெறிக்கு அமைவது போல<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும் | (1) பொது விவேகம் ..<br>(2) தூயகணிதம் | .. இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி, கட்டுப்பெத்த, கனிட்ட தொழில்நுட்ப நிலையம், கண்டி (சிங்கள மொழி மூலம்) யாழ்ப்பாணக் கனிட்ட தொழில்நுட்ப நிலையம் (தமிழ் மொழிமூலம்) |
| 9. | நிருமாண சிற்பம் .. | மாலைநேர—மூன்று வருடங்கள் .. | படம் வரை தொழில் பயில்வோர் ஆரம்ப பயிற்சி நெறிக்கு அமைவது போல அல்லது ஆரம்ப எந்திரவியல் விஞ்ஞான பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும் | ஷை | .. இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரி, கட்டுபெத்த (ஆங்கில மொழி மூலம்) |
| 10. | புவிவரலாற்றியல் .. | மாலைநேர—இரண்டு வருடங்கள் .. | சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, பௌதிகம், இரசாயனம் ஆகியவை உட்பட, இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி<br>அல்லது<br>பௌதிகம், இரசாயனம் ஆகியவற்றுடன் சி. பா. த. ப. பரீட்சையில் சித்தி. பௌதிகம், இரசாயனம் ஆகிய பாடங்களில் சித்தி வேறொரு தடவை க பொ த. (சா. த.) ப. பரீட்சையில் பெற்றிருக்கப்படலாம்.<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும் | (1) வியாசம் (ஆங்கிலம்) ..<br>(2) பொதுவிவேகம் .. | .. இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரி, கட்டுப்பெத்த (ஆங்கிலம் மூலம்) |
| | | | **வர்த்தகப் பயிற்சி நெறிகள்** | | |
| 11. | மதிப்பீட்டுத் தகுதித்தேர்வு .. | நாலு வருடங்கள் (பகல் இரு வருடங்கள் அதன்பின் மாலைநேரம் இரு வருடங்கள்) | சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், ஆங்கில மொழி ஆகிய பாடங்கள் உட்பட க. பொ. த. ப. (சா. த.) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. 6 பாடங்களினும் சித்தி இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி பெறப்பட்டிருப்பதுடன் 3 சித்திகள் திறமைச் சித்திகளாக இருக்க வேண்டும்<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும் | (1) வியாசம் (ஆங்கிலம்)<br>(2) பொது விவேகம்<br>(3) எண்கணிதம் "அ" அல்லது "ஆ"<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டதாரிகள் எழுத்துப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள் | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (ஆங்கில மொழிமூலம்) |

| பயிற்சி நெறி எண் | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறியின் தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்கவேண்டிய பாடங்கள் | பயிற்சி நெறி நடைபெறும் தாபனம் (போதனுமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| *12. | கணக்குப் பதிவாளர் வர்த்தகத் தராதரப் பத்திரம் | பகல் நேர—ஒரு வருடம் .. | எண்கணிதம் அல்லது கணிதம் அல்லது வர்த்தக கணிதமும் சிங்கள மொழியும் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த. ) ப. பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. (சிங்கள மொழி மூல மாணவர்களுக்கு) எண்கணிதம் அல்லது கணிதம் அல்லது வர்த்தக கணிதமும் தமிழ் மொழியும் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த. ) ப. பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. (தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு) எண் கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது கணிதமும் ஆங்கில மொழியும் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. (ஆங்கில மொழிமூல மாணவர்களுக்கு)<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும் | (1) பொது விவேகம் ..<br>(2) எண்கணிதம் "அ" அல்லது "ஆ"<br>(3) கட்டுரை (மாணவர்கள் தமக்குரிய சொந்த மொழி மூலம் இதற்குத் தோற்றவேண்டும்) | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானே, வதுளை, காலி, கண்டி, குருநாகல் ஆகிய இடங்களிலுள்ள கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் (சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம்) யாழ்ப்பாண கனிட்ட தொழில்நுட்ப நிலையம் (ஆங்கிலம், தமிழ் மொழி மூலம்) கேகாலை கனிட்ட தொழில் நுட்ப நிலையம் (சிங்களம்) |
| 13. | கணக்குப் பதிவாளர் வர்த்தக தராதரப் பத்திரம் | மாலைநேர (அங்கீகரிக்கப்பட்ட, தொழில் நிலையத்தில் அல்லது அரசாங்கப் பகுதியில் அல்லது ஸ்தல அதிகார சபையில் அல்லது வேறு யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் தொழில் புரிபவர்களுக்கு மட்டுமே) | 12 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவது போல<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாமலிருக்கவேண்டும் | 12 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவதுபோல | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானே, பதுளை, கண்டி, குருநாகல் ஆகிய இடங்களிலுள்ள கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் (சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம்) காலி, கேகாலை கனிட்ட தொழில் நுட்ப நிலையம் (சிங்களம் மூலம்) யாழ்ப்பாணம் கனிட்ட தொழில்நுட்ப நிலையம் (ஆங்கிலம், தமிழ் மொழிகள் மூலம்) |
| *14. | சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் வர்த்தகத் தராதரப் பத்திரம் | பகல் நேர—ஒரு வருடம் .. | ஷ .. | ஷ .. | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானே, பதுளை, காலி, கண்டி, குருநாகல் கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் (சிங்கள, ஆங்கில மொழிகள் மூலம்) கேகாலை க. தொ. நு. நிலையம் (சிங்களம் மூலம்) யாழ்ப்பாண க. தொ. நு. நிலையம் (தமிழ், ஆங்கிலம் மூலம்) |
| 15. | ஷ .. | மாலைநேர (அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலையத்தில் அல்லது அரசாங்கப் பகுதியில் அல்லது ஸ்தல அதிகார சபையில் அல்லது வேறு யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் தொழில் புரிபவர்களுக்கு மட்டும்) | ஷ .. | ஷ .. | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானே, பதுளை, கண்டி, குருநாகல் க. தொ. நு. நிலையங்கள் (சிங்கள, ஆங்கில மொழிகள் மூலம்,) யாழ்ப்பாணம் க. தொ. நு. நிலையம் (ஆங்கிலம், தமிழ் மூலம்) |

* 12 ஆம், 14 ஆம் இலக்கப் பயிற்சி நெறிகளை மாணவர்கள் சித்திகரமாகப் பூர்த்தி செய்தபின் அவர்கள் கணக்குப் பதிவாளர்க்கான உயர்தர வர்த்தகப் பத்திர நெறியையேனும் சுருக்குத் தட்டெழுத்தாளர்க்கான உயர்தர வர்த்தகப் பத்திர நெறியையேனும் அல்லது இவ்விரண்டையும் பின்பற்றலாம் (ஒரு வருட பகல் நேர வகுப்பு). மேலும் இரு பயிற்சி நெறிகளையும் ஒரே நேரத்தில் பின்பற்றுதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**மிக முக்கியம் :** பினன்ரேப் பயிற்சி நெறி, யாதேனும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே.

| பயிற்சி நெறி எண் | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறியின் தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்கவேண்டிய பாடங்கள் | பயிற்சி நெறி நடைபெறும் தாபனம் (போதனுமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| 16. | விற்பனையியலும் விற்பனை முகாமையும் .. | போயா–முன்தினங்களில் மட்டும ஒரு வருடம் (பின்னேரங்களில் விற்பனை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே) | சிங்கள/ஆங்கில மொழி உட்பட 6 பாடங்களில் இருதடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் சித்தி. (சிங்கள மொழி மூல மாணவர்களுக்கு சிங்கள மொழியும் ஆங்கில மொழி மூல மாணவர்களுக்கு ஆங்கில மொழியும்)<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது விவேகம் ..<br>(2) கட்டுரை<br>(சிங்கள மொழி மூல மாணவர்கள் சிங்கள மொழி மூலமும் ஆங்கில மொழிமூல மாணவர்கள் ஆங்கில மொழி மூலமும் இதற்குத் தோற்ற வேண்டும். க. பொ.த. (உயர்தர) ப. பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி எய்தியவர்கள் அல்லது உயர்ந்த தகைமை பெற்றுள்ளவர்கள் புகுமுக பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படுவர். | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம் ஆங்கிலம் மூலம்) |
| 17. | சுருக்குத் தட்டெழுத்தாளர் தரா..தரப் பத்திரம் | பகல் நேர—ஒரு வருடம் .. | 16 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவதுபோல (தமிழ் மொழி மூல மாணவர்கள் க. பொ. த. (சா. த.) பத்திரப் பரீட்சையில் தமிழில் சித்தி அடைந்திருக்க வேண்டும்)<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும் | 19 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவது போல தமிழ் மொழி மூல மாணவர்கள் தமிழ் மொழி மூலம் கட்டுரைக்குத்தோற்ற வேண்டும் | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை, (சிங்களம், ஆங்கிலம் மூலம்)· கனிட்ட தொழில் நுட்ப நிலையம், யாழ்ப்பாணம் (தமிழ், ஆங்கிலம் மூலம்) |
| 18. | சுருக்குத் தட்டெழுத்தாளர் தராதரப் பத்திரம் | மாலைநேர—ஒரு வருடம். (இத்துறையில் அல்லது இதனுடன் தொடர்புபட்ட துறைகளில் கடமை புரிபவர்களுக்கு மாத்திரமே) | இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. த.) ப. பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி (சிங்கள/தமிழ்/ஆங்கில/மொழி மூல மாணவர்களுக்கு முறையே சிங்கள/தமிழ்/ஆங்கிலமொழி)<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது விவேகம் .. ..<br>(2) கட்டுரை (மாணவர்கள் தமக்குரிய சொந்த மொழி மூலம் இதற்குத்தோற்ற வேண்டும். க. பொ. த. உயர்தர பத்திரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி எய்திய வர்கள் அல்லது உயர்ந்த தகைமை பெற்றவர்கள் புகுமுகப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படுவர்) | இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்களம் ஆங்கிலம் மூலம்) கண்டி க. தொ. நு. நிலையம் (சிங்கள, ஆங்கிலம் மூலம்) யாழ்ப்பாணம் க. தொ. நு. நிலையம் (தமிழ், ஆங்கிலம் மூலம்) |
| 19–28. | தொழில் பயிற்சி நெறிகள் முதல் 18 வார அடிப்படைத் தொழில் நுட்ப பயிற்சியின் பின், எஞ்சியிருக்கும் காலத்தில் பின்வரும் தொழில்கள் எதிலேனும் ஒன்றில் விசேட பயிற்சி அளிக்கப்படும்<br>(19) பொருத்தலும் எந்திர வேலையும் (i)<br>(20) தன்னியக்கி இயந்திரங்கள் (ii)<br>(21) தச்சு வேலையும் இணைப்பு வேலையும் (iii)<br>(22) கட்டடங்களில் மின்சார அமைப்பு வேலை (iv)<br>(23) மேசன் வேலை (v)<br>(24) தகட்டு உலோக வேலை (vi)<br>(25) பேழை செய்தல் (vii)<br>(26) பொருத்துதல் (viii)<br>(27) எந்திர வேலை (ix)<br>(28) வானொலி எந்திரவியலும் மின் எந்திரவியலும் (x) | பகல் முழுநேர—இரு வருடங்கள் | 8 ஆந் தரம் அல்லது 8 ஆம் வகுப்பு<br>வயது : 1.10.70 அன்று 18 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும் | (1) பொறிமுறை பற்றிய பொது அறிவு ..<br>(2) எண்கணிதம் "இ" | I ம், II ம், III ம், IV ம் பயிற்சி நெறிகள் அனுராதபுரம், பதுளை, காலி, கண்டி, கேகாலை, குருனுகல் கனிட்ட தொழில்நுட்ப நிலையங்களிலும் மருதானை இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியிலும் சிங்களம் மூலம் நடைபெறும். * V ஆம் பயிற்சி நெறி அனுராதபுரம், குருனுகல், இரத்மலானை கனிட்ட தொழில்நுட்ப நிலையங்களில் சிங்களம் மூலம் நடைபெறும். II ஆம், III ஆம் IV ஆம், VI ஆம், VII ஆம், VIII ஆம், IX ஆம் பயிற்சி நெறிகள் இரத்மலானை கனிட்ட தொழில் நுட்ப நிலையத்தில் சிங்கள மொழி மூலம் நடைபெறும். X ஆம் பயிற்சி நெறி மருதானை இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் சிங்களம் மூலம் நடைபெறும். *யாழ்ப்பாணத்திம் க. தொ. நு. நிலையத்தில் தமிழ் மூலம் நடைபெறும் |

| பயிற்சி நெறி எண் | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறியின் தன்மை | தகவுத்திறன் தேவைகள் | புகுமுகப் பரீட்சைக்கு எடுக்கவேண்டிய பாடங்கள் | பயிற்சி நெறி நடைபெறும் தாபனம் (போதனமொழி விபரத்துடன்) |
|---|---|---|---|---|---|
| 29. | நீர்க்குழாய் தொழில் .. | பகுதி நேர—மாலை ஒரு வருடம் (இத்தொழிலில் ஈடுபட்டுள்ள வர்களுக்கு மாத்திரமே) | 8 ஆந் தரம் அல்லது 8 ஆம் வகுப்பு அல்லது கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (அரசினர் அல்லது ஸ்தல ஆட்சிச் சபை சேவையில் உள்ளவர்களுக்கு இத்தேவையிலிருந்து தவிர்வு அளிக்கப் படலாம்)<br>வயது : 1.10.70 அன்று 17 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும். | (1) பொது எந்திரவியல் அறிவு<br>(2) எண்கணிதம் "இ" | .. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, மருதானை க. தொ. நு. நிலையங்கள் அனுராதபுரம், பதுளை, குருநாகல், கண்டி (சிங்களம் மூலம்), யாழ்ப் பாணம் க. தொ. நு. நிலையம் (தமிழ் மூலம்) |
| 30. | மணிக்கூடு திருத்துதல் .. | ஷை .. | ஷை .. | ஷை | .. க. தொ. நு. நிலையம், கண்டி (சிங்களம் மூலம்) |
| 31. | வானொலி பேணல் .. | ஷை .. | ஷை .. | ஷை | .. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, மருதானை. அனுராதபுரம், குருநாகல், கண்டி க. தொ. நு. நிலையங்கள் (சிங்களம் மூலம்) யாழ்ப்பாணம் க. தொ. நு. நிலையம் (தமிழ் மூலம்) |
| 32. | மின்கம்பி இணைத்தல் .. | பகுதிநேர மாலை ஒரு வருடம் (இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே) | ஷை .. | ஷை | .. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, மருதானை, அனுராதபுரம், காலி, கண்டி, கேகாலை, பதுளை, குருநாகல் க. தொ. நு. நிலையங்கள் (சிங்களம் மூலம்) யாழ்ப்பாணம் க. தொ. நு. நிலையம் (தமிழ் மூலம்) |
| 33. | கோர்த்தல் .. .. | பகுதிநேர—மாலை மூன்று வருடங்கள் (இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே) | 23 ஆம் இலக்கப் பயிற்சி நெறிக்கு அமைவது போல | ஷை | .. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, மருதானை (சிங்கள மூலம்) |
| 34. | லெற்றர் பிறெஸ் எந்திர வேலை .. | ஷை .. | ஷை .. | ஷை | .. ஷை |
| 35. | புத்தகம் கட்டும் வேலை .. | ஷை .. .. | ஷை .. | ஷை | .. ஷை |
| 36. | தச்சு வரைதல் .. | ஷை .. | ஷை .. | ஷை | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை, அனுராதபுரம், கண்டி, குருநாகல், காலி கனிட்ட தொழில்நுட்ப நிலையங்கள் (சிங்களம் மூலம்) |
| 37. | பொருத்துதல் .. | பகுதி நேர—மாலை மூன்று வருடங்கள் (இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே) | ஷை .. | ஷை | .. இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை, குருநாகல், கண்டி க. தொ. நு. நிலையங்கள் (சிங்களம் மூலம்) யாழ்ப்பாணம் க, தொ. நு. நிலையம் (தமிழ் மூலம்) |
| 38. | எந்திர வேலை .. .. | ஷை .. .. | ஷை .. | ஷை | .. ஷை |

*திறைசேரி இல. 1/23/21/8 (ஜி).*

**மொழிபெயர்ப்பாளர் சேவையில் ஆட்சேர்ப்பதற்குப் பரீட்சை—1970, சனவரி**

*மேற்கூறிய பரீட்சை சம்பந்தமாக 1969.12.12 ஆந் தேதியின் 14,884 ஆம் இல. அரசாங்கச் செய்திமடலில் தோன்றும் 1969.12.4 ஆந் தேதியிடப்பட்ட அறிவித்தலின் 8 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களின் முடிவுத் தேதி 1970 சனவரி மாதம் 10 ஆந் தேதியாக நீடிக்கப்பட்டுள்ளதெனப் பரீட்சார்த்திகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

பொதுத்திறைசேரி,
கொழும்பு.
*1969 திசம்பர் மாதம் 26 ஆந் தேதி.*

12–1580—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்—பதவியா உப பிரிவு

பதவியா நீர்ப்பாசன உபபிரிவிலுள்ள கீழ்க்காட்டப்பெற்ற கட்டடவேலைகட்கு அனுராதபுரத்திலுள்ள வடமத்திய மாகாண பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 24.1.70 காலை 10 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பின் உடன் திறக்கப்படும்.

| வேலை அட்டவணை | வேலை விபரம் | பதியப்பட்ட தொகை ரூபா. | கேள்விக் கட்டணம் ரூபா. |
|---|---|---|---|
| பி. எஸ்– 8.. | நுண் தொழில் உதவியாளர் விடுதி–ட்ராக்ட்–E, பதவியா நீர்ப்பாசனத் திட்டம் | 50,000 | 50 |
| பி. எஸ்– 9.. | நுண் தொழில் உதவியாளர் விடுதி ட்ராக்ட்–12, பதவியா நீர்ப் பாசனத்திட்டம் | 50,000 | 50 |
| பி. எஸ்–10.. | ஸ்பில் கும் கோஸ்வே 5 மைல், 40 சங்கிலி வலது கரை பெரும் வாய்க்கால் | 25,000 | 25 |

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேலே சொல்லப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், பதவியா, மகாகனத்தராவை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் 10.1.70 காலை 10 மணி தொடக்கம் 20.1.70 நண்பகல் 12 மணி வரைக்கும் கொடுக்கப்படும். கேள்வியினராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் மேற் கூறிய நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்திலோ அல்லது கச்சேரியிலோ கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டைக் காட்டல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் அனுப்பவேண்டும். அனுப்பப்படும் உறையின் வலது மேல் மூலையில் வேலைவிபரம் எழுதப்படல் வேண்டும்.

இக்கேள்விக்காகிய மேலதிகமான விபரங்களெல்லாவற்றையும் பதவியாவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
பதவியா நீர்ப்பாசனத்திட்டம்.

நீர்ப்பாசன அலுவலகம்,
பதவியா,
1969 ம் ௵ டிசெம்பர் ௴ 14 ந உ.

12–1146—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

**3 (Collapsible Doors) தகர்வுக் கதவுகளும், 6 (Cell Gates) சிறை அறைப் படலைகளும் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்**

மேற்குறிப்பிட்ட சேவை சம்பந்தமான கேள்விப்பத்திரங்களை 9.1.1970 ந் திகதி மு. ப. 11.00 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50/– கட்டுப் பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்)யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி 1970.1.8 ந் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " தகர்வு கதவுகளும், சிறை அறைப் படலைகளும் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கம் கீழ் மூலையில் குறிப்பிடப் பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

6. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

7. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலையொப்பந்தங்களைப் பெற முடியாது தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

8. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1970.1.9 ந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

9. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

10. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு.
1969 ம் ௵ டிசம்பர் ௴ 17 ந உ.

12–1107—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

## கமத்தொழிற்சேவை உதவி ஆணையாளர் பகுதி—திருகோணமலை மாவட்டம்

கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளரால் மேற்காணும் சிறிய நீர்ப்பாசன வேலைகட்குக் கேள்விப்பத்திரங்கள் அரசாங்கத்திற் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக் காரர்களிடமிருந்து 26.1.1970 நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அவை 27.1.70 காலை 9.30 மணிக்குத் திறக்கப்படும்.

**குச்சவெளி காரியாதிகாரியின் பகுதி :**

| | குளத்தின் பெயர் | வேலை விபரம் | பயிர்ச்செய்கைக்குழுவின் பகுதி |
|---|---|---|---|
| 1. | ஒட்டன்குளம் | வாய்க்கால கட்டுதல் | வன்னியார் வெளி |
| 2. | குடவெவ-பரணமதவாச்சிய | திருத்தம் | பரணமதவாச்சிய |
| 3. | பேரில்லாக்குளம் | புதுப்பித்தல் | சமலன்குளம் |
| 4. | சமலன்குளம் (புல்மோட்டை) | வான் கட்டுதல் | சமலன்குளம் |
| 5. | ஒடவயல்குளம் | புதுப்பித்தல் | முதலைப்பாழிமேடு |
| 6. | நறங்கன்குளம் | புதுப்பித்தல் | சமலன்குளம் |
| 7. | மகா ஆலங்குளம் | திருத்தம் | குசவனுத்துவெளி |
| 8. | புளியங்குளம் | வான் கட்டுதல் | புதுவெளிக்குளம் |
| 9. | பரணமதவாச்சிய | திருத்தம் | புதுவெளிக்குளம் |
| 10. | எருமடுக்குளம் | திருத்தம் | புதுவெளிக்குளம் |
| 11. | கள்ளிக்காட்டுக்குளம் | திருத்தம் | ஆண்டாங்குளம் |
| 12. | குஞ்சுக்குளம் | திருத்தம் | புதுவெளிக்குளம் |
| 13. | பொய்கைக்குளம் | துரிசு கட்டுதல் | குசவனுத்துவெளி |
| 14. | குசவனுத்து | ஆணைக்கட்டுத் திருத்தம் | குசவனுத்துவெளி |
| 15. | மடுவாக்குளம் | ஒழுக்குத் திருத்தம் | மடுவாக்குளம் |
| 16. | ஒட்டுப்புல்லுக்குளம் | புதுப்பித்தல் | சமலன்குளம் |
| 17. | சமலன்குளம் (நிலாவெளி) | வாய்க்கால்திருத்தம் | மடுவாக்குளம் |
| 18. | வண்ணாத்திக்குளம் | திருத்தம் | மடுவாக்குளம் |
| 19. | மானுண்டகுளம் | வாய்க்கால் திருத்தம் | மடுவாக்குளம் |
| 20. | குடப்புலியன்குளம் | புதுப்பித்தல் | புதுவெளிக்குளம் |

**மூதூர் காரியாதிகாரியின் பகுதி :**

| | | | |
|---|---|---|---|
| 1. | புளியங்குளம் | திருத்தம் | கூனித்தீவு |
| 2. | சிறு ஆலங்குளம் | துருசு கட்டுதல் | சம்பூர் |
| 3. | சேமவட்டவன்குளம் | திருத்தம் | நையநந்தை |
| 4. | வேலங்குளம் | திருத்தம் | நையநந்தை |
| 5. | காடிப்பாலிக்குளம் | திருத்தம் | சம்பூர் |
| 6. | பெரியகுளம் | திருத்தம் | கூனித்தீவு |
| 7. | புலிகுத்தின குளம் | திருத்தம் | கூனித்தீவு |

**கிண்ணியா காரியாதிகாரியின் பகுதி :**

| | | | |
|---|---|---|---|
| 1. | மகமார்குளம் | திருத்தம் | மாகமம் சல்லிக்கிளப்பு |

**திருகோணமலைக் காரியாதிகாரியின் பகுதி :**

| | | | |
|---|---|---|---|
| 1. | விளாங்குளம் | றெகுலேட்டர் கட்டுதல் | கன்னியா |

**கோமரங்கடவெல காரியாதிகாரியின் பகுதி :**

| | | | |
|---|---|---|---|
| 1. | சின்னக்குளம் | திருத்தம் | பனிக்கட்டிமுறிப்பு |
| 2. | திவுல்வெவ | திருத்தம் | கோமரங்கடவெல |

இக்கேள்விக்கான வெற்றுப் பத்திரங்களை 23.1.1970 நண்பகல் 12 மணிவரை இவ் அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம். பத்திரம் பெறுவதற்குக் கேள்விக் கட்டணமாக ரூபா 10 ஒரு கச்சேரியிற் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டுக் காண்பிக்கப்படல் வேண்டும். இக் கேள்விகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ் அலுவலகத்தில் (அலுவலக நேரங்களில்) பெற்றுக் கொள்ளலாம்.

திருகோணமலை.
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 14 ந உ.

ஐ. சண்முகராசா,
கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர்

12–1089—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

---

எமது இல. எல் டபிள்யூ/1/63

## கேள்வி அறிவித்தல்

அரசாங்கத்தில் ரூபா 25,000/க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்துள்ள தனிப்பட்ட கொந்திறுத்துக்காரர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆதியனவற்றி லிருந்து மேற்காணும் வேலைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளையோ செய்வதற்கான கேள்விகள், 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை காணிக்கமிஷனர் இலாகா கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

வெலிபெலெஸ்ஸ—அட்டிப்பொல றோட்டில் 2 மைல் நீளம் 13 மதவுகள்.

2. கேள்விகள் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறக்கூடிய படிவங்களில் மட்டுமே மேலே கூறப்பட்ட இவ்விரு பிரதிகளில் நிரப்பப் பட்டு அனுப்பப்படல் வேண்டும். புத்தளம் கச்சேரியில் ரூபா 50/- வைப்புப்பணமாகக் கட்டிய பற்றுச்சீட்டைக் காண்பித்தே மேற்கூறிய ஒவ்வொரு வேலைக்குமான கேள்விப் பத்திரம் பெறமுடியும். கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ந் திகதி ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணிவரை விநியோகிக்கப்படும். கேள்விகள் சம்பந்தமான ஏனைய விபரங்களும் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறமுடியும்.

3. கேள்விகள் கொழும்பு மகா செயலகத்தின் 357 ம் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படலாம். இன்றேல் பதிவுத் தபால் மூலம், தலைவர், கேள்விச்சபை, காணிக்கமிஷனர் இலாகா, தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

எம். டபிள்யு. எஸ். குணரத்ன,
அரசாங்க அதிபர், புத்தளம்.

கச்சேரி, புத்தளம்.
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 15 ந உ.

12–1140—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

## சுகாதாரத் திணைக்களம்—மட்டக்களப்புப் பிரிவு

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தேவையான ஆட்களும் சேவையும்.**—1970 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ந் திகதி 1970 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கு உரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையரல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து பதுளை பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமதியான வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ii) **கேள்விப் பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அநுராதபுரம், பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களிலும் எனது அலுவலகத்திலும் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முதல் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச் சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றை கேள்விகள் முடிவடையும் காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினுல் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகருக்கோ தெரிவித்தல் வேண்டும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பப்பட வேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சர், மட்டக்களப்பு, என்ற முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும், இடது பக்க கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது என்னிடமோ செயலாளர்/கணக்காளரிடமோ கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக் கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் 4 **வது** பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப் படிவங்களில் உள்ள சாப்பாட்டு "பீ" அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தின் அட்டவணை "சீ" யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனுல் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றி அமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தை கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்திற் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளை படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப் படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. நோயாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் கொடுக்கப்படும் உணவிற்குத் தேவையான அரிசிக்கு மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியினுல் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. வாரத்திற்கு ஒருவருக்குரிய கட்டுப்பாட்டு அரிசி அளவை அடிப்படையாகக் கொண்டு நிலையப் பொறுப்பு அலுவலாளர் மூலம் ஒப்பந்தகாரருக்கு வாரந்தோறும் அரிசி வழங்கப்படும்.

சுகசேவை அத்தியட்சகர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1969 ம் ௵ டிசெம்பர் ௴ 15 ந் உ.

அ. பா. நூ. முகமது,
சுகசேவை அத்தியட்சகர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

**மேலே குறிப்பிட்டுள்ள அட்டவணை**

| (1) நிலையம் | (2) கேள்வி வைப்புப் பணம் | (3) பிணை வைப்புப் பணம் | (4) கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | (5) அண்ணளவான உணவுகளின் அளவுகள் — ஊழியர்களுக்கு — சுத்தமான மீன் | ஊழியர்களுக்கு — கருவாடு | ஊழியர்களுக்கு — மரக்கறி | நோயாளிகளுக்கு — சுத்தமான மீன் | நோயாளிகளுக்கு — கருவாடு | நோயாளிகளுக்கு — மரக்கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | | | | | | |
| கிராம வைத்தியசாலை, ஏருவூர் | 100 | 600 | 24.1.1970 மு. ப. 10 மணி | 200 | 450 | 900 | 750 | 1,500 | 3,000 |
| கிராம வைத்தியசாலை, பொத்துவில் | 100 | 400 | | 300 | 600 | 1,250 | 900 | 1,850 | 3,750 |
| கிராம வைத்தியசாலை, அக்கரைப்பற்று | 100 | 600 | | 400 | 700 | 1,550 | 450 | 850 | 1,750 |
| கிராம வைத்தியசாலை, நிந்தவூர் | 100 | 300 | | 250 | 500 | 1,000 | 100 | 200 | 400 |
| கிராம வைத்தியசாலை, கழுவாஞ்சிக்குடி | 100 | 300 | | 50 | 50 | 100 | 550 | 1,100 | 2,200 |
| கிராம வைத்தியசாலை, வாகரை | 100 | 500 | | 300 | 650 | 1,250 | 350 | 700 | 1,350 |
| பிரசவ விடுதி, லகுகலை | 100 | 300 | | 200 | 350 | 700 | 350 | 700 | 1,400 |
| பிரசவ விடுதி, நாவற்காடு | 100 | 300 | | 200 | 450 | 900 | 100 | 250 | 450 |
| பிரசவ விடுதி, திருக்கோவில் | 100 | 300 | | 150 | 300 | 600 | 100 | 150 | 250 |
| பிரசவ விடுதி, அக்கரைப்பற்று | 100 | 300 | | 100 | 100 | 300 | 150 | 250 | 450 |

12-1127—26.12.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

**பெற்றேல் என்சின்களுக்கான ஆடுதண்டுகள், ஆடுதண்டு வளையங்கள், பாரவண்டி ("ட்றக்") அளவு விசிறி நாடாக்கள் ஆகியவற்றின் விற்பனை—**

**இ. போ. ச. விற்றுத்தீர்க்கும் வளவு, இரத்மலானை**

கொழும்பு—5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத்தலைவர், பெற்றேல் என்சின்களுக்கான ஆடுதண்டுகள், ஆடுதண்டு வளையங்கள், பாரவண்டி அளவு விசிறி நாடாக்கள் ஆகியவற்றை இரத்மலானையிலிருக்கும் இ. போ. ச. விற்றுத்தீர்க்கும் வளவிலிருந்து கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார். கீழ்க் குறித்த இனங்களையும் மாதிரிகளையும் கொண்ட ஆடுதண்டுகளும் ஆடுதண்டு வளையங்களும் நியம அளவு தொடக்கம் 060 மிக அளவு வரையாகும்.

சவ்றலே எல். எம், 6700, எம். எம், பெட்போட் ஓபி, இன்டர்நாஷனல் ஆர்—160 ,டொட்ஜ், கொமர் 5 சிலிண்டரும், 6 சிலிண்டரும் போட்/வீ 8–85 எச். பீயும் 95 எச். பீயும், போர்ட் தேம்ஸ், பல மாதிரிகள்.

கேள்விப்பத்திரச் சாதனங்களின் விவரங்களின்படி மேற்குறிக்கப்பட்டவை கூறுகளாகத் தொகுக்கப்பட்டு கூறுகளாகவே கேள்விக்கு விடப்படும்.

கேள்விகள் முடிவடைவதற்குக் குறிக்கப்பட்ட திகதிக்கு முந்திய திகதி நண்பகல் 12.00 மணிவரை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதான பத்திரங்களில் பொறியிட்ட கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படவேண்டும்.

கொழும்பு—5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காளர உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 250 காசாகக் கட்டி, இதன் பற்றுச்சீட்டுக்களை கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்கு முன் எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

கேள்விகள், 1970 ஆம் ஆண்டு பெப்ருவரி 1 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முடிவடையும். இரத்மலானை இ. போ. ச. விற்றுத்தீர்க்கும் நிலையப் பொறுப்புத்தியோகத்தருடன் ஒழுங்குசெய்து இரத்மலானை இ. போ. ச. விற்றுத்தீர்க்கும் நிலையத்தில் வழக்கமான அலுவலக நேரங்களில் ஆடுதண்டுகள், ஆடுதண்டு வளையங்கள், பாரவண்டி அளவு விசிறி நாடாக்கள் ஆகியவற்றைப் பார்வையிடலாம்.

மேலதிக விவரங்களை என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்.

வினியோகப் பகுதி,
இ. போ. ச.,
200, கிருல வீதி,
கொழும்பு—5.

12—1253—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல, 14,886.

---

## கட்டிடங்கள் திணைக்களம்

வவுனியா மாவட்டம் கட்டிடங்கள் திணைக்களத்தில் பராமரிப்பு வேலைகளும் சிறிய திருத்தங்களும் 1970 ம் ஆண்டில் செய்வதற்கு தொகுதி தொகுதிகளாக–வட்டாரம் " ஏ " (வவுனியா பிரதேசம்) " பீ " (முல்லைத் தீவுப்பிரதேசம்) " ஸீ " (மன்னார் பிரதேசம்)—கேள்விப் பத்திரங்கள், யாழ்ப்பாணம், கட்டிடங்கள் திணைக்களம், வடபகுதி கண்காணிப்புப் பொறியியலாளர் காரியாலய கேள்விச்சபையின் தலைவரால் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**மாவட்டத்தொகுதிகள் " ஏ " " பி " " ஸீ " ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

2. கட்டிடங்கள் திணைக்கள வவுனியா மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப்பத்திரங்களில் இணைப் படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. கட்டிடங்கள் திணைக்களத்தில் தொகுதிகள் " ஏ ", " பீ ", " ஸீ " இவற்றிற்கு முறையே ரூபா 24,000/, 23,000/, 30,000/ க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவுபெற்றுள்ள ஒப்பந்தக் காரர்கள் மட்டும் அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 25/ " ஏ " " பீ " ஒவ்வொன்றிற்கும், ரூபா 50/ " ஸீ " க்கும் செலுத்திய பற்றுச்சீட்டுகளை 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ந் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு முன்பதாக மேலே குறிப்பிட்ட பொறியியலாளருக்குக் கொடுத்ததன் பின்னரே கேள்விப் பத்திரங் களைப் பெறுவதற்கு தகுதிபெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்பு பவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10/ வீதம் மீளளிப்புச் செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறியியலாளரிடம் செலுத்தி பற்றுச் சீட்டை பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக் கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தக்காரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிக்கான கடிதத்தையோ குறிப் பிட்ட பொறியியலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களை கோரவிரும்பும் விண்ணப்பக்காரர் பற்றுச் சீட்டை கொடுக்கும்போது நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து தகுந்த பத்திரத்தைப் பெற்று அதில் கைவசமிருக்கும் வேலைகளின் விபரங்களைக் குறிப்பிட்டு அதற்கேற்ற கேள்விச் சபைகளுக்கு சமர்ப் பிக்கப்படல் வேண்டும்.

6. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள கட்டிடங்கள் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங் களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

தெ. மாணிக்கம்,
கண்காணிப்புப் பொறிவலாளர், வடபகுதி.
(கட்டிடங்கள்)

கண்காணிப்புப் பொறிவலாளர், வடபகுதி அலுவலகம்,
கட்டிடங்கள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 12 ந உ.

12–1120—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கேள்விப்பத்திர முடிபுகள்

| கேள்விப்பத்திரத்தில் கட்டளையிடப்பட்ட தொகை | விடயம் | கேள்விப் பத்திரம் மூடப்பட்ட திகதி | கிடைக்கப்பெற்ற விலைக்குறிப்பீடுகளின் எண்ணிக்கை | கட்டளையிடப்பட்ட தொகை | வழங்குபவர் | எந்த நாட்டின் உற்பத்தி | விலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1500 நீ/தொன் | சுருள்களிலுள்ள இருப்புக் கடதாசி 1030 மிமீ | 16/6/69 | 26 (பிந்திக் கிடைத்த கேள்விப்பத்திரங்கள் 2). | 250 நீ/தொன் | திருவாளர்கள் ஏலோப் ஹன்ஸன், S—413 03, கோதெபேர்க், சுவீடன். | சுவீடன் | £83.3.7 நீ/தொன் ஒன்று சிஜ எப், கொழும்பு |
| | | | | 250 நீ/தொன் | திருவாளர்கள் பேர்லி வொன் ஸ்கவுல்ஸ் அன் கோ., 401–24, கோதென் பேக், சுவீடன் | சுவீடன் | £83.3.7 நீ/தொன் ஒன்று சிஜ எப், கொழும்பு |
| | | | | 250 நீ/தொன் | திருவாளர்கள் ஸ்கன்டி னேவியன் ஓவர்சிஸ் பேப்பர் கொம்பனி, த. பெ. 263, கோதென்பேக், சுவீடன். | சுவீடன் | £83.3.7 நீ/தொன் ஒன்று சிஜ எப், கொழும்பு |
| | | | | 250 நீ/தொன் | திருவாளர்கள் யான்லீபிக் லிமிட்டெட், த. பெ. 254, கோதென்பேக், சுவீடன் | சுவீடன் | £83.3.7 நீ/தொன் ஒன்று சிஜ எப், கொழும்பு |
| | | | | 500 நீ/தொன் | திருவாளர்கள் பிறின்ஸ் ஜோர்ஜ் பல்ப் அன் பேப்பர், கொம்பனி லிமிட்டெட், த. பெ. 6000, பிரிட்டிஸ் கொலம்பியா, கனடா | கனடா | யு. எஸ் $193/50 நீ/தொன் சிஜஎப், கொழும்பு |
| 20 நீ/தொன் | ஸ்ராச் | 24/7/69 | 25 (பிந்திக்கிடைத்த கேள்விப்பத்திரங்கள் 2) | 20 நீ/தொன் | திருவாளர்கள் அன்றுயு பேக்கர் பீரீவை லிமிட்டெட், த. பெ. 22, ஹோம்புஸ், என். எஸ். டபிள்யு 2140, அவுஸ்திரேலியா | அவுஸ்திரேலியா | ரூபா. 1034 நீ/தொன் ஒன்று சிஜ எப், கொழும்பு |

தி.ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு நவெம்பர் மீ 27 ந் உ.

12–1288—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## வர்த்தக வியாபார அமைச்சு

### உபயோகத்திற்கு உதவாத சாமான்களின் ஏல விற்பனை

கீழே தரப்பட்டுள்ள உபயோகத்திற்கு உதவாத சாமான்களின் ஏல விற்பனை வர்த்தக வியாபார அமைச்சுக் காரியாலயம், மாடிவீடு இல. 52, கோல்பேஸ் கோட், கொழும்பு 3 ல் நடத்தப்படும். ஏல விற்பனையானது 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆந் திகதி 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.

| | | |
|---|---|---|
| மை தாங்கிகள் (ஒரு குழிவு) | .. .. | 10 |
| தட்டெழுத்தாளர் மேசைகள் | .. .. | 1 |
| தட்டெழுத்துப் பொறி (ஆங்கிலம்) | .. | 2 |

ஏல விற்பனையின்போதே சாமான்களுக்குரிய முழுத்தொகை பணத்தையும் செலுத்த வேண்டும்.

ஆர். நீலரத்ன,
நிரந்தரச் செயலாளருக்காக.

வர்த்தக வியாபார அமைச்சு,
கோல்பேஸ் கோட்,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 18 ந் உ.

12–1170—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886.

---

## சிறை இலாகா

### பாவனைக்கற்ற மோட்டார் வாகன ஏல விற்பனை

கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் யாழ்ப்பாண சிறைப் பகுதிக்குரிய மோட்டார் வாகனம் காரியாலய வளவுள் எதிர்வரும் 17.1.70 காலை 10.00 மணியளவில் பகிரங்க ஏலவிற்பனையில் விடப்படும்.

1. 33 ஸ்ரீ 2027–மொறிஸ் கொமோர்சியல்–பிரத்தியேக வாகனம். அதிகக் கூடிய ஏலதாரர், உடனடியாகப் பணத்தைச் செலுத்தி வாகனத்தையும், விற்பனை நடந்த மூன்று நாட்களுக்குள் எடுத்துச் செல்ல வேண்டும். விற்பனையில் பங்குபெற எண்ணுபவர்கள், சிறை அதிகாரியுடைய அனுசரணையுடன் வாகனத்தைப் பார்வையிடலாம்.

எந்த ஒரு ஏலதாரரையோ அல்லது அனைவரையுமோ, விற்பனையில் பங்கு கொள்ளாமல் காரணம் காட்டாது இரத்துச் செய்யும் உரிமை, கீழ்கையொப்பமிட்டிருப்பவருக்கு உண்டு.

சி. ரி. யான்ஸ்,
சிறை அதிகாரி, யாழ்ப்பாணம்.

சிறை இலாகா,
யாழ்ப்பாணம்,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 17 ந் உ.

12 1108—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

## ஆயவிற்பனேயும், குத்தகை விற்பனேயும்

### நெடுந்தீவு—குறிகாட்டுவான் மோட்டார் வள்ளச் சேவை 1.1.70 தொடக்கம் 31.12.70 வரை

12.12.69 ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நெடுந்தீவு—குறிகாட்டுவான் மோட்டார் வள்ளச்சேவைக்கான கேள்விப் பத்திர விளம்பரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கச்சேரி,
யாழ்ப்பாணம்,
19.12.69.

எவ். சீ. பீற்றேர்ஸ்,
யாழ்ப்பாண மாவட்ட அராசங்க அதிபர்.

12—1100—26.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,886

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.**

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் அறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எவையும் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரவிருக்கும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்களைச் செய்து திருப்பி அனுப்புதற்கு பெறுநர் விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1969

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | 5.12.69 | வெள்ளி | 28.11.69 | வெள்ளி | பி. ப. | 3 30 |
| | 12.12.69 | வெள்ளி | 4.12.69 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி | 12.12.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி | 18.12.69 | வியாழன் | பி. ப. | 3.00 |
| | **1970** | | | | | |
| **சனவரி** .. .. | 2.1.70 | வெள்ளி .. | 26.12.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 9.1.70 | வெள்ளி .. | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 16.1.70 | வெள்ளி .. | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 23.1.70 | வெள்ளி .. | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 29.1.70 | வியாழன் .. | 21. 1.70 | புதன் | ந. ப. | 12.00 |
| **பெப்புருவரி** .. | 5.2.70 | வியாழன .. | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | 13.2.70 | வெள்ளி .. | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.2.70 | வெள்ளி .. | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 27.2.70 | வெள்ளி .. | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| **மாச்சு** .. .. | 5.3.70 | வியாழன் .. | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.3.70 | வெள்ளி .. | 5. 3.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 20.3.70 | வெள்ளி .. | 13. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26.3.70 | வியாழன் .. | 20. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு.
1969 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 12 ஆந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்கப் அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.